பக்கங்கள்: 11

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 15 திங்கட்கிழமை 31.07.2023 கதிர் 262

## மூழ்கிய கப்பலை மீட்டவரான மாலுமியை கைவிடமாட்டோம்

### இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவிப்பு



மூழ்கிய கப்பலை மீட்ட கப்பல் மாலுமியை சமுத்திரத்திற்குள் தள்ளிவிடுவதற்குநாம் தயார் இல்லை என்று இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

பொல்காவலவில் நேற்று நடைபெற்ற பெரமுனவின் மக்கள்சந்திப்பின்போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் நாம் ஒரு மாலுமியை எமது கப்பலுக்கு நியமித்தோம். இருப்பினும் கப்பல் ஆபத்தில் சிக்கிக் கொண்டது. அது மூழ்கும் நிலைக்குச் சென்றது. உடனடியாக நாம் மாலுமியை மாற்றினோம் அந்த மாலுமி கப்பலை மீட்டார். இப்போது கப்பலை சரியான திசைக்கு நகர்த்திக் கொண்டிருக்கிறார்.

அவர்தான் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க. அவ்வாறான ஒருவரை நாம் உடனடியாக சமுத்திரத்திற்குள் தள்ளிவிட்டுக் கப்பலுடன் கரை சேர்வதற்குத் தயார் இல்லை. ஆகவே அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் 10

## சஜித்துக்குத் தேர்தல் மேனியா அமைச்சர் ஹரீசன் விமர்சனம்

சஜித்துக்கு தேர்தல் மேனியா ஏற்பட்டுள்ளதாக முன்னாள்அமைச்சர்ஹரீசன் தெரிவித்தார்.அநுராதபுரத்தில் நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மக்கள் சந்திப்பின் போது அவர் இதனைத் தெரி வித்தார்.

“நாட்டின் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் சஜித் பிரேமதாசவுக்கு இப்பொழுது தேர்தல் மேனியா ஏற்பட்டுள்ளது. அவர் மட்டுமே தேர்தலை நடத்துங்கள், தேர்தலை நடத்துங்கள் என்று எங்கு சென்றாலும் கூவிக் கொண்டிருக்கிறார். ஆனால் அவருடைய கட்சியினர் தேர்தல் தொடர்பில் விருப்பத்தைக் கொண்டிருக்கவில்லை. இந்த விடயம் அவருக்கு புரியவில்லை.

எவ்வாறாயினும்ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தேர்தலை நடத்தாமல் இருக்கப் போவதில்லை அடுத்த வருடத்தின் ஜீன் ஜீலையில் நிச்சயமாக ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் அதில் சஜித் பிரேமதாச போட்டியிடலாம் அதன் மூலம் அவருடைய தேர்தல் மேனியாவுக்கு ஒரு முடிவு கிடைக்கும் என எதிர்பார்க்கிறேன்” – என்றார்.

## இனி அது ரகசியம் அல்ல!

பொதுஜனபெரமுன அணி (மொட்டுக்கட்சி) கடந்த இருவாரங்களாகக் கடும் மகிழ்ச்சியில் இருக்கின்றது. தங்களுடைய அரசியல் எதிர்காலம் குறித்த நம்பிக்கை ஒளிக்கீற்றுக்கள் தென்படத் தொடங்கியருப்பதே அதற்குக் காரணம்.

ஒரு வருடத்திற்கு முன்னர் அரகலய போராட்டக்காரர்கள் பெரமுனவினரை விரட்டி விரட்டி வெளுத்தார்கள். பேரவாவிக்குள் தூக்கி வீசினாரக்ள். ராஜபக்ஷக்களை பதவியை விட்டோ வைத்தனர. அப்போது யாரும் நினைக்கவில்லை மொட்டுக் கட்சி மீண்டு வரும் என்று. கட்சியினர் தமது செயற்பாடுகள் அனைத்தையும் நிறுத்தினர். குறிப்பாக மொட்டுவுக்கு ஆதரவுத் தளம் அதிகம் உள்ள கிராமங்களில் கட்சி மூச்சு விடுவதைக்கூட நிறுத்தியிருந்தது.

அரகலய போராட்டத்தைத் தொடர்ந்து தாம் மொட்டுக் கட்சியினர் என்று வெளியே அடையாளப்படுத்திக்கொள்ளக்கூட அஞ்சி நடுங்கும் நிலமையே ஏற்பட்டது. இதனால் கட்சி தனது அடித்தளக் கட்டுமானமான தொகுதிக் கிளைகளின் செயற்பாடுகளில் பல மாதங்களாக ஈடுபடவில்லை. கூட்டங்கள்கூட்டப்படவில்லை. அப்படிக் 2

## மீண்டெழுகிறது மொட்டுக் கட்சி

நூற்றுக்கு 70 சதவீதமான தொகுதிக் கூட்டங்கள் முடிவுக்கு வந்துள்ளன. நாம் மீண்டெழுந்துள்ளோம் என்று பொது ஜன பெரமுனவின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜான்சன் பெனாண்டோ தெரிவித்துள்ளார்.

பொல்காவலவில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பின்போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

அரகலயவின் பின்னர் பெரமுன முடிந்து விட்டது என்றார்கள். அமைச்சர்கள் ஒழிந்து விட்டார்கள் என்றார்கள். பெரமுனவின் ஊடாக அரசியல் எதிர்காலமே இல்லை என்றார்கள். ஆனால் தற்போது நாடளாவிய ரீதியில் நமது கட்சியின் 70 சதவீதமான தொகுதி 10

## யாழ்ப்பாணம் ஓர் அருள் பூமி

### சைவமும் தமிழும் கொட்டிக் கிடக்கிறது என்கிறார் தமிழ்நாட்டு நடிகை கஸ்தூரி

சைவமும் தமிழும் கொட்டி கிடக்கின்ற ஓர் அருள் பூமி, யாழ்ப்பாணம் என்று நேற்ற இணுவில், தாவடிக்கு வருகை தந்த தென்னிந்திய திரைப்பட நடிகையும் சிறந்த பேச்சாளருமான கஸ்தூரி தெரிவித்தார்.

தாவாடி அம்பலவான முருகன் ஆலயத்தின் திருமஞ்சத் திருவிழாவுக்கு வருகை தந்து சிறு உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

“யாழ்ப்பாணம்என்பது அருள் பூமி. இலங்கை முழுவதுமே முருகனின் கடாட்சம்தான் அமைந்துள்ளது.

இப்போதுதான் ஆங்காங்கே விகாரை கட்டுகிறார்கள். சைவ சமயமும் இங்கேதான் இருக்கிறது தெற்கில் கதிர்காமம் முதல் வடக்கே நல்லூர் யாழ்ப்பாணம் வரை எல்லாமே அவன் அருள் மட்டுமே இருக்கிறது.

இதை யாரும் மறுக்க 10

## இரண்டு மாதங்களுக்குள் கியூ.ஆர். முறை அகற்றம்

### அமைச்சர் காஞ்சன தெரிவிப்பு

அடுத்த இரண்டு மாதங்களுக்குள் கியூ.ஆர். முறமையை அகற்றுவதற்கு எதிர்பார்த்துள்ளதாகஎரிசக்தித் துறை அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.

மாத்தறை தொகுதியில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது உள்ள க்யூ ஆர் கோட்டா முறைமையை இரண்டு மாதங்களுக்குள் முழுமையாக நீக்குவதற்கு எதிர்பார்த்து நடவடிக்கைகளைத் 10

# பிறப்புரிமையான தம் அதிகாரத்தையே தமிழர்கள் கேட்கின்றனர்: யாசகமல்ல

## ஜனாதிபதி ரணிலுக்கு சுரேஷ் பிரேமச்சந்திரன் சாட்டையடி

**தமிழ் மக்கள் தங்களது பிறப்புரிமையான அதிகாரங்களைக் கேட்கிறார்களே தவிர, உங்களிடம் யாசகம் கேட்கவில்லை. அதனைத்தருவதற்கோ மறுதலிப்பதற்கோ உங்களுக்கு எவ்வித தார்மீக உரிமையும் இல்லை. தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினை தீர்க்கப்படாதவரை இந்த நாட்டின் எதிர்காலம் என்பது இருள்மயமானதாகவே இருக்கும் என்பதை ஆட்சியாளர்களும் சிங்கள இனவாத சக்திகளும் புரிந்துகொள்ளவேண்டும்.**

**இவ்வாறு தெரிவித்துள்ளார் ஈபிஆர் எல்எவ் கட்சித் தலைவர் சுரேஷ் க.பிரேமச்சந்திரன். அண்மையில் ஜனாதிபதிரணில் விக்கிமசிங்க அனைத்துக் கட்சித்தலைவர்களின்கூட்டத்தைக்கூட்டி அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து நடத்தியகலந்துரையாடல்தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத்தெரிவித்தார். இதுதொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:**

**மேற்கண்ட கூட்டம் தொடர்பாக கருத்துதெரிவிக்கும்போதேஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க.பிரேமச்சந்திரன் மேற்கண்டகேள்வியைஎழுப்பியுள்ளார். இது குறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையின் முழுவிபரம் வருமாறு:**

**இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜூலை 20 அன்று புதுடெல்லி சென்று இந்திய பிரதமர் நரேந்திர மோடியைச்சந்தித்தவேளையில் இந்தியாவினால் 13ஆம் திருத்தச்** 2

## லண்டன் பெரு நகரத்தில் நேற்று பலநூறு தமிழர் திரண்டு பேரணி

### கறுப்பு ஜூலை படுகொலைக்கு நீதி கோரி





(நிதர்சன்)

தமிழினத்தின் மீதான சிங்கள அரசின் திட்டமிட்ட இனப்படுகொலைகளில் ஒன்றான கறுப்பு ஜீலைப் படுகொலை இடம்பெற்றதன் 40 ஆண்டுகால வலிசுமந்த நினைவுநாளினைமுன்னிட்டு பிரித்தானியாவின் பெருநகர மத்தியில் நேற்றுத் திரண்ட புலம்பெயர் தமிழர்கள் நீதி வேண்டிப் பெரும் பேரணி ஒன்றை நடத்தினர்.

ஈழம் அமைதலே தமிழ் மக்களின் நிரந்தர பாதுகாப்பிற்கான ஒரே தீர்வு அத்துடன் இலங்கையில் சுபீட்சத்திற்கும் உறுதிப்பாட்டுக்கான 10

## ஜனாதிபதித் தேர்தலில் ரணிலுக்கு சவால் விடுக்க ஒருவருமே இல்லை

### இப்படிச் சொல்கிறார் அமைச்சர் ஹரின்

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு சவால் விடுக்கும் வகையில் எந்த ஒரு வேட்பாளரும் இல்லையென்று அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

வட கொழும்பில் நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மக்கள் சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

2040ஆம் ஆண்டு வரையில் ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சியே நடைபெறப்போகிறது இதனை நாங்கள் செயல் வடிவத்தில் காண்பிக்கவுள்ளோம்.

இன்றைக்கு ஓராண்டுக்கு முன்னர் நாட்டின் நிலைமையை அனைவரும் மறந்திருக்க மாட்டார்கள் எரிபொருளுக்காக எரிவாயுவுக்காக நீண்ட வரிசைகள் இருந்தன. பதற்றமான சூழல் நீடித்தது பொருட்களுக்கு தட்டுப்பாடுகள் நீடித்தது ஒரு வருடத்தில்இந்தநெருக்கடிகள் எல்லாவற்றையும் மாற்றி அமைத்துசுமூகநிலைமையை உருவாக்கியுள்ளார். ரணில் விக்ரமசிங்க.

அவர் ஜனாதிபதி பதவியைச் சவால்களுக்கு மத்தியில் பொறுப் 2

## சுகாதாரத்துறையில் ஊழல் மலிந்துள்ளது

### எதிர்க் கட்சித் தலைவர் காட்டம்

நாட்டின் சுகாதாரத்துறை ஊழல் நிறைந்து காணப்படுகின்றது என்று காட்டமாகத் தெரிவித்துள்ளார். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச.

அநுராதபுரத்துக்கு நேற்றுச்சென்றிருந்த அவர், புனித வழிபாடுகளைநிறைவுசெய்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசும்போது இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடு தற்பொழுது வங்குரோத்து நிலைக்கு சென்று கொண்டிருக்கின்றது. அதற்கு சிறந்த உதாரணமாக இருப்பது சுகாதாரத் துறையாகும். சுகாதாரத் துறையில் மருந்துக்கக் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தரம் குறைந்த மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் இறப்புகள் நிகழ்ந்துள்ளன.

மக்களின் உயிர்களைப் பாதுகாக்க முடியாத சுகாதாரத் துறை ஊழல்கள் நிறைந்து காணப்படுகின்றது. எனவே உடனடியாக மக்கள் ஆணை பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். நாம் இந்த விடயத்தில் உறுதியாக இருக்கின்றோம். ஆட்சியாளர்களின் இயலாமையை மக்கள் மீது சுமத்த முடியாது. மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது ஆட்சியாளர்களின் 2

## இனி இது .....

கூட்டப்பட்டால் மக்களால் நையப்புடைக்கப்படலாம் என்பதே அதற்குக் காரணம்.

ஆனால் கடந்த இரு வாரங்களாக மொட்டுக் கட்சியின் தொகுதிக் கிளைகளை மறுசீரமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. நாமல் ராஜபக்ஷதான் அதில் மும்முரமாக உள்ளார். நேற்றும்கூட குருநாகலில் அவர் ஒரு தொகுதிக்கிளைச் சிரமைப்புக் கூட்டத்தில் கலந்துகொண்டார். அவர் செல்லும் இடம் எல்லாம் நல்ல கூட்டம் திரள்கின்றது. அதுவும் மொட்டுக் கட்சியின் தொகுதிகளில் ராஜபக்ஷக்களே எதிர்பாராத அளவிற்குமொட்டுக்கட்சியின் திரண்டு வந்தது அவர்களை ஆச்சரியப்படுத்தியிருக்கிறது.

இதனால் அடுத்த தேர்தலுக்கு இடையில் கட்சியை மறுசீரமைப்புச் செய்துவிடலாம் என்ற குஷியில் இப்போது மொட்டுக் கட்சியின் தலைமைத்துவங்கள்துள்ளிக் குதிக்கின்றன. அதனால்தான் இப்போது நடப்பதும் தங்கள் ஆட்சிதான் என்றும் ரணில் விக்கிரமசிங்க தாங்கள் நியமித்த ஆட்சியாளர்தான் என்றும்பகிரங்கமாகவேகூறத் தொடங்கியிருக்கிறார்கள்.

இருந்தாலும் நாமலுக்கும் கட்சியின் மற்றைய உயர் தலைவர்களுக்கும் இடையில் வியூகத்தில் முரண்கள் இருக்கின்றன. ரணிலை எதிர்த்து அரசியல் செய்வதன் மூலமும் அவரது ஆட்சியைக் குற்றஞ்சாட்டுவதன் மூலமும் கட்சியை வெகு விரைவில் மீட்டெடுத்து அடுத்த தேர்தலுக்குள் தயாராகிவிடலாம் என்பது நாமலின் எதிர்பார்ப்பு. ஆனால், கட்சியின் மூத்த தலைவர்கள் இப்போதைக்கு ரணிலைப் பகைக்வேண்டாம் என்கிறார்கள்.

அண்மையில் மொட்டுக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் அதன் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேசினார்கள். கட்சியின் மூத்த உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவிகள் தரப்படவில்லை என்பது குறித்து அப்போது அவர்கள் விசனித்தார்கள். இதற்காக ரணிலை எதிர்க்க வேண்டும் என்றார்கள். ஆனால் பஸிலோ அமைச்சுப் பதவி தரவில்லை என்பதற்காக ரணிலை எதிர்க்கவேண்டும் என்பதில்லை. நாடாளுமன்றத்தில் நாம்தான் பெரும்பான்மையைக்கொண்டிருக்கின்றோம். எம்மை மீறி அவர் (ரணில்) ஒன்றும் செய்துவிட முடியாது. நாம்தான் அவரை ஆட்சிக்குக் கொண்டுவந்தோம். எனவே பொறுத்திருக்கலாம் என்று பதிலளித்திருக்கிறார். இதனால் இப்போதுகட்சிக்குள் நாமலின் மவுசு அதிகரித்து வருகின்றது என்றும் சொல்கிறார்கள்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## பிறப்புரிமையான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவமாறு இலங்கை அதிபருக்கு வலியுறுத்தப்பட்டது.

ஜனாதிபதியின் டெல்லிப் பயணத்தைத் தொடர்ந்து, ஜூலை 24 அன்று மாலை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்கு-கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சரின் செயலாளர் விக்னேஸ்வரனையும்வடக்கு மாகாணசபையின்முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வனையும் தனது அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பின்பொழுது, நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ச கல்வி அமைச்சர் சுசில்பிரேம் ஜெயந்தமற்றும்அமைச்சர்பிரசன்ன ரணதுங்க ஆகியோர் அடங்கிய ஒரு குழுவை தாம் நியமித்திருக்கிறார் எனவும்அவர்களினூடாக13ஆவது திருத்தம் தொடர்பாக பேசி நிறைவேற்றக் கூடிய விடயங்களை நிறைவேற்றவேண்டும் என்றும் கூறியதுடன், முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் பரிந்துரைத்த கலாநிதி விக்னேஸ்வரன் உள்ளிட்ட 5 பேரையும் தாம் நியமித்த மூன்றுபேரையும் உள்ளடக்கிய குழு இவர்களுடன் இணைந்து பணியாற்றலாம் என்றும் கூறியுள்ளார்.

இவை தொடர்பாக வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் பத்திரிகைகளுக்கு பேட்டியளித் திருந்தார். இதனைத் தொடர்ந்து ஜனாதிபதி ஜூலை 26 அன்று மாலை, நாடாளுமன்றத்தில் அங்கம்வகிக்கும் கட்சிகளின் தலைவர்களை 13ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவது தொடர்பில் கலந்துரையாடுவதற்காக அழைத்திருந்தார். இதில் தமிழ்த்தேசியமக்கள்முன்னணியும்ஜேவிபியையும்தவிர, நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் மலையக தமிழ்க் கட்சித் தலைவர்கள், வடக்கு-கிழக்கு தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள், முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் ஏனைய சிங்களக் கட்சிகளின் தலைவர்கள் கலந்துகொண்டார்கள்.

குறிப்பாக இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடு என்றும் தமிழ் மக்களுக்கு எவ்வித அதிகாரங்களும் பகிரப்படக்கூடாது என்றும் பொலிஸ் அதிகாரம் வழங்கப்படவே கூடாது என்றும் 13ஆவது திருத்தம் தேவையற்றது என்றும் கூறுகின்ற சிங்கள பௌத்த இனவாதக் கருத்துகளையே தொடர்ந்து பேசிவருகின்ற அத்துரலிய ரத்ன தேரர், சரத் வீரசேகர, விமல்வீரவன்ச, உதயகம்மன்பில ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர்.

தமிழர் தரப்பைப் பொறுத்தவரை 13ஆவது திருத்தம்முழுமையாகநிறைவேற்றப்படவேண்டும் என்றும் மாகாணசபைத்தேர்தல்களை உடன்நடத்தப்படவேண்டும் என்றும்வலியுறுத்தப்பட்டது.

13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஜனாதிபதிக்கு மக்கள் ஆணை இல்லை என்றும் மக்கள் ஆணையைப் பெற்றுக்கொண்ட பின்னர் ஜனாதிபதி அதுபற்றி யோசிக்கலாம் என்றும் விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, சரத் வீரசேகர போன்ற இனவாத தலைவர்கள் கூறினார்கள். ஏனைய சிங்களத் தலைவர்களைப் பொறுத்தவரையில், பதின்மூன்றாவதுதிருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தாங்கள் ஒத்துழைப்பதாகக் கூறினார்கள். அப்படி இருந்தபொழுதும்கூட, உங்களுக்கு மாகாணசபைத் தேர்தல் தேவையா? அதிகாரப்பகிர்வு தேவையாஎன்றகேள்வியை முன்வைத்து ஜனாதிபதி கூட்டத்தை முடிவுக்குக் கொண்டுவந்தமையானது அவர் உண்மையிலேயே 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதில் உறுதியுடன் இருக்கிறாரா என்ற சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

ரணில்விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரையில், 2024ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வெல்வதென்பதே அவரது பிரதானமான சிந்தனையாகும். அதற்குப் பங்கம் வரக்கூடிய எவ்வித நடவடிக்கைகளையும் அவர் ஏற்றுக்கொள்ளமாட்டார் என்பதும் வெளிப்படையாகத் தெரிகிறது. இலங்கையைப் பொருளாதாரச் சரிவிலிருந்து மீட்பதற்காக 4 பில்லியன் அமெரிக்க டொலரை வழங்கிய இந்தியப் பிரதமரை ரணில் விக்கிரமசிங்க, டெல்லியில் சந்தித்தபொழுது, 13ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டு மாகாணசபை தேர்தல்கள் நடத்தப்படவேண்டும் என்பதை இந்தியப் பிரதமர் வலியுறுத்தியிருந்தார். ஆகவே இந்திய பிரதமரையும் பகைத்துக்கொள்ளக் கூடாது, வடக்கு-கிழக்கு, மலையக மக்களின் வாக்கு வங்கிகளையும் இழந்து விடக்கூடாது, சிங்கள பௌத்த வாக்கு வங்கியையும் பகைத்துக்கொள்ளக்கூடாது என்ற கணக்கில் காலம் கடத்துவதே ஜனாதிபதியின் நிலைப்பாடா? என்ற கேள்வியும் எழுகின்றது.

அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் என்பது 1988ஆம் ஆண்டு ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் ஜே.ஆர். ஜெயவர்த்;தனவால் அரசியல்சாசனத்தில் உள்வாங்கப்பட்டது. ஆகவே அதனை நிறைவேற்றுவதற்கு நாடாளுமன்றக் கட்சிகளின் தலைவர்களுடனானகூட்டம் அவசியம்தானா? என்ற கேள்வியும் எழுகின்றது.

மாறிமாறி சிங்கள பௌத்த இனவாத ஆட்சியாளர்களால் வஞ்சிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு தமிழ் மக்களும் இந்த நாட்டின் சிங்கள மக்களைப் போன்றே பூர்வீகக் குடிகளாவர். அவர்கள் தங்களைத் தாங்களே ஆட்சி செய்துகொள்வதற்கும் தமது பிரதேசத்தைத் தாமே அபிவிருத்தி செய்துகொள்வதற்கும் சகல உரித்துகளையும் கொண்டவர்கள். அவர்கள் தங்களுக்கான அதிகாரங்களைப் பெற்றுக்கொள்வதற்காக உருவாக்கப்பட்டதுதான் மாகாணசபை முறைமை. ஆனால் வடக்கு-கிழக் கிற்கு மட்டும் அதனை மட்டுப்படுத்தாமல் சிங்கள பகுதிகளையும்இணைத்துஒன்பது மாகாணங்களுக்கானதாக ஜே.ஆர். ஜெயவர்த்தன மாற்றியமைத்தார்.

இப்பொழுதும்கூட, வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள்தான் தமக்குரிய அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து வருகின்றனர். இந்நிலையில் ஒன்பது மாகாணங்களுக்கான அதிகாரப் பகிர்வு பற்றி ஜனாதிபதி பேசுவது அர்த்தமற்றது. வடக்கு-கிழக்கு தமிழ் மக்களைப் பொறுத்தவரை, பொலிஸ் அதிகாரங்கள், காணி அதிகாரங்கள், நிதி அதிகாரங்கள் உட்பட ஒரு முழுமையான அதிகாரப் பகிர்வு என்பது அவசியமானது. இவை சிங்களப் பகுதிகளுக்குத் தேவையா இல்லையா என்பதை ஜனாதிபதியோ, ஆட்சியாளர்களோ தீர்மானிக்கலாம். ஆனால் வடக்கு-கிழக்கு தமிழ் மக்களுக்கு இவை தேவை என்பதைத் தமிழ் மக்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர்.

தமிழ் மக்கள் தங்களது பிறப்புரிமையான அதிகாரங்களைக் கேட்கிறார்களே தவிர, உங்களிடம் யாசகம் கேட்கவில்லை. அதனைத்தருவதற்கோ மறுதலிப்பதற்கோ உங்களுக்கு எவ்வித தார்மீகஉரிமையும்இல்லை. தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினை தீர்க்கப்படாதவரை இந்த நாட்டின் எதிர்காலம் என்பது இருள்மயமானதாகவே இருக்கும் என்பதை ஆட்சியாளர்களும் சிங்கள இனவாத சக்திகளும் புரிந்துகொள்ள வேண்டும். எனவே ஜனாதிபதி காலத்தை இழுத்தடிக்கும் செயற்பாடுகளைக் கைவிட்டு, 13ஆவது திருத்தத்தை ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் முழுமையாக நிறைவேற்ற முன்வர வேண்டும் - என்றுள்ளது.

# ராஜபக்ஷக்களும் ரணிலும் என்றும் ஒருவரையொருவர் பாதுகாப்பர்

## அதுவே அவர்கள் இலக்கு என்கிறார் அனுர



ராஜபக் ஷக்களும் ரணில் விக்கிரமசிங்கவும் ஒருவரை ஒருவரைபாதுகாத்துக்கொள்வார்கள். தமக்கிடையில் பிரச்சினைகள் இருப்பதாகக் காட்டிக்கொண்டாலும் ஒருவரை ஒருவர் பாதுகாப்பதையே இலக்காக் கொண்டுள்ளார்கள் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமாரதிசாநாயக்கதெரிவித்தார்.

அரகலய போராட்டத்தினால் கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு வெளியேறினார். மஹிந்த ராஜபக்ஷ திருகோணமலை கடற்படை முகாமில் ஒளிந்துகொண்டார். பஷில் ராஜபக்ஷ கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக வெளியேற முடியாத நிலைமையை ஏற்பட்டது. நாமல் ராஜபக் ஷ பொது வழியில் நடமாட முடியாத நிலை ஏற்பட்டது. ஆனால் தற்போது நிலைமை தலைகீழாக மாறியுள்ளது.

ஏனென்றால் ஜனாதிபதி பதவியில் இருப்பவர் ரணில் விக்கிரமசிங்க. அவர் இந்த நிலைமைகளை மாற்றி உள்ளார். ராஜபக் ஷக்கள் சுதந்திரமாக நடமாடுவதற்கு வழி சமைத்துள்ளார். ராஜபக் ஷக்களை பாதுகாக்கின்றார். இவர்கள் தங்களுக்குள் பிரச்சினைகள் இருப்பது போல் காட்டிக் கொள்கிறார்கள். ஆனால் இவர்களுக்குள் எந்த விதமான பிரச்சினையும் இல்லை.

இவர்கள் ஒருவரை ஒருவர் பாதுகாத்துக் கொள்வார்கள். அதிகாரத்தில் இருக்கும்போது தமக்குப் பிரச்சினைகள் ஏற்படுகின்ற நிலைமையில் அவர்கள் ஒருவரை ஒருவர் சமாளித்து பாதுகாப்பதையே இலக்காகக் கொண்டுள்ளார்கள். இந்தக் கலாசாரத்தை மாற்றவேண்டும். இந்தத் தெளிவை மக்கள் பெற வேண்டும். இல்லாது விட்டால் இந்த நாட்டை மீட்க முடியாது - என்றார்.

## ஜனாதிபதித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேற்று சவால்களை நிறைவேற்றியுள்ளார். இருப்பினும் இன்னும் பல வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டியுள்ளது. அதற்காக அடுத்த ஜனாதிபதி தேர்தலிலும் வேட்பாளர் பதவி வழங்க வேண்டியது அவசியமாகிறது. அதுவே நாட்டின் எதிர்காலத்திற்கும் முக்கியமானது.

அதேநேரம் ரணில் விக்கிரமசிங்க சவால் விடுக்கும் வகையில் எந்த ஒரு வேட்பாளரும் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் இருக்கப் போவதில்லை. அவர் வெறுமனே ஐந்துவருடங்களுக்கே ஜனாதிபதியாகப் பதவி வகிக்கப்போகிறார் என்பதை நினைவில்கொண்டுஆணை வழங்கவேண்டும்-என்றார்.

## சுகாதாரத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முக்கிய கடமையாகும். அதில் இருந்து இந்த ஆட்சி விலகிவிட்டது - என்றார்.

## மீண்டெழுகிறது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டங்களை நிறைவு செய்துள்ளோம்

கட்சியை அடி மட்டத்திலிருந்து கட்டி எழுப்பியுள்ளோம். அந்தப்பணிகள்வெகு சிறப்பாக நடைபெறுகின்றன. ஆகவே இப்போது பெரமுன எந்தவொரு தேர்தலிலும் தனது பெரும்பான்மையை நிரூபித்து அடுத்த ஆட்சியை கைப்பற்றுவது உறுதியான விடயம். இதில் எந்தவிதமான சந்தேகங்களும் கொள்ள வேண்டிய அவசியமில்லை - என்றார்.

# நாடாளுமன்றைக் கலைத்துவிட்டு அதிகாரத்தை ரணிலிடம் வழங்கலாம்

## வஜிரவுக்கு வந்த விபரீத ஆசை




நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு அதிகாரத்தை ரணிலிடம் ஒப்படைத்தால் அவர் நாட்டைத் திறம்பட வழி நடத்துவார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ரணில் விக்ரமசிங்க இந்த நாட்டுக்கு கிடைத்த அருமையான, புதுமையான தலைவர்.

அவர் நாட்டுக்குத் தலைமை வகிப்பதற்கு எவரும்ஆலோசனைவழங்க வேண்டிய அவசியமில்லை அவருக்கு ஆலோசகர்கள் தேவையில்லை அவருக்கு உபதேசகர்கள் தேவையில்லை அவர் தனியாக நாட்டைக் கொண்டு நடத்துவார்.

நாடாளுமன்றத்தில் உள்ள 225 பேரையும் வீட்டுக்கு அனுப்பிவிட்டுநாடாளுமன்றத்தை முழுமையாக மூடிவிட்டு நாட்டை நடத்தும் அதிகாரத்தை முழுமையாக அவரிடம் ஒப்படைத்தால் நாட்டை திறம்பட நடத்துவார் அத்தனை பெருமைகளைக் கொண்ட தலைவரிடம் நாட்டை முழுமையாக ஒப்படைப்பதே இந்த நாட்டின் எதிர்காலத்திற்கு சிறந்தவொரு நடவடிக்கையாக அமையும் - என்றார்.

# தளபதி சவேந்திரவை பிரித்தானியாவில் தடைசெய்ய கீலீவ் எபேட் எம்.பி ஆதரவு

இலங்கை முப்படைப் பிரதானியான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா உள்ளிட்ட போர்க் குற்றவாளிகளைப் பிரித்தானியாவின் உலகளாவிய மனித உரிமைகள் தொடர்பான தடைவிதிப்பு அதிகார சபையின் கீழ் (Global Human Rights Sanction Regime) தடைசெய்வதற்கு பிரித்தானிய அரசு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென வலியுறுத்தி, பிரித்தானியாவின் எல்தம் (Eltham) பகுதி நாடாளுமன்ற உறுப்பினர் கீலீவ் எபேட் (Hon. Clive Efford MP) வலியுறுத்தியுள்ளார்.

கிலீவ் எபேட்டிற்கும் தொழிற் கட்சிக்கான தமிழர்கள் அமைப்பின் உறுப்பினர்களுக்கும் இடையிலான இராஜதந்திர சந்திப்பு ஒன்று ஜூலை 25 காலை 10.00 மணியளவில் மெய்நிகர் வழியாக இடம்பெற்றுள்ளது.

சட்ட ஆலோசகரும் மனித உரிமைகள் செயற்பாட்டாளுமான கீத் குலசேகரம் தலைமையில் இடம்பெற்ற இந்த முக்கிய சந்திப்பில் தொழில்கட்சிக்கான தமிழர்கள் (Tamils For Labour) அமைப்பின் தலைவர் சென் கந்தையா, ஐசிபிபிஜி (ICPPG) அமைப்பின் சார்பில் சுபமகீஷா வரதராசா ஆகியோர் கலந்துகொண்டனர்.

இனப்படுகொலையின் நேரடி சாட்சியங்கள் மற்றும் சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களான லோஜனன் தர்மலிங்கம், பபிஷன் போல்ராஜ், நிலக்ஜன் சிவலிங்கம், அனுஷன் பாலசுப்பிரமணியம் மற்றும்துஷாந்தன்செல்வரஞ்சன்ஆகியோரும் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

கீத் குலசேகரத்தின் உரையில், இலங்கையில் இடம்பெறும் இனப்படுகொலைக்கு வரலாற்று ரீதியாக பிரித்தானியாவே பொறுப்பு என்பதை விளக்கி, அந்த நாடு தமிழ்மக்களுக்கு நீதி வழங்க வேண்டிய கடமைப்பாட்டையும் எடுத்துரைத்தார். ஐரிஜேபி (ITJP) மற்றும் (ICPPG) ஆகிய அமைப்புக்கள் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சிற்கு( (ய்ளீம்நு) போதுமான ஆதாரங்களைச் சமர்பித்தபோதும் இன்னும் உரிய நடவடிக்கை எடுக்க தவறியிருக்கின்றது என்றும் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் இறுதிப் போரில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் மட்டுமன்றி, தற்போது இலங்கையில் தொடரும் ஆள்கடத்தல் மற்றும் சித்திரவதைகளும் சவேந்திர சில்வாவின் கட்டுப்பாட்டில் உள்ள ஆயுத படைகளே மேற்கொண்டுவருவதால் அதற்கும் சவேந்திர சில்வாவே பொறுப்பு என்றும், சந்திப்பில் கலந்துகொண்ட சித்திரவதைக்குள்ளானவர்கள் இதற்கு நேரடிசாட்சி என்றும்தெரிவித்தார்.

சவேந்திர சில்வா யுத்தகுற்றங்களில் ஈடுபட்டிருப்பதை ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையில் குறிப்படப்பட்டிருப்பதையும், அவர் மீது ஏற்கனவே அமெரிக்கா, கனடா பயணத்தடை விதித்துள்ளதையும் எடுத்துக்காட்டிய அவர், அமெரிக்கா, கனடாவின் வழியை பின்பற்றி பிரித்தானியாவும் தடை விதிக்கவேண்டும் என்று கோரி பிரித்தானிய புலம்பெயர் தமிழ் செயற்பாட்டாளர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர் என்பதையும் விவரித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய சென் கந்தையா, தளபதி சவேந்திர சில்வாவினை தடைசெய்வதற்கு இதுவரை 50ற்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனுப்பிய கோரிக்கைகளுக்குச் சரியான பதிலை பிரிட்டிஷ் அயலுறவுத்துறை அமைச்சு தராதது வருத்தத்தை தருவதுடன், தற்போதைய பிரித்தானிய ஆட்சியாளர்கள் இலங்கைக்கு எதிராக தடை விதிக்க தயக்கம் காண்பிப்பது ஏன் என்று வினவினார்.

பிரித்தானிய எதிர்கட்சி தலைவர் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் விசாரனை செய்ய வேண்டும் என கூறியதை வரவேற்பதாகவும் அதே போல் இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலையினை பிரித்தானியா அங்கீகரிக்க வேண்டும் என வழியுறுத்தினார்.

அனைவரின் கருத்துக்களையும் உள்வாங்கிய நாடாளுமன்ற உறுப்பினர், அவர்களுக்குத் தனது முழுமையான ஆதரவை வெளிப்படுத்தியதுடன் இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலை என தாம் முழுமையாகஏற்றுக்கொள்வதாகவும், அதனை பிரித்தானிய அரசு ஏற்றுக்கொள்ள தன்னாலான அழுத்தம் வழங்கவும் சம்மதித்தார். தமது அயலுறவுத்துறை அமைச்சுக்குத் தனது தொகுதியிலுள்ள பாதிக்கப்பட்ட தமிழ்மக்கள் சார்பில் இராணுவத்தளபதி சவேந்திர சில்வாவினை தடைசெய்யக் கோரி அழுத்தம் கொடுப்பதாகவும் வாக்களித்தார்.

# நாமலைத் தலைமைக்கு கொண்டுவரத் தீர்மானம்

## பயணம் தொடங்கியது என்கிறார் அமைச்சர் இந்திக்க



இளம் தலைவரான நாமல் ராஜபக்சவை தலைமைத்துவத்திற்கு கொண்டு வருவதற்காகவேநாடளாவிய ரீதியில் மக்களை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதாக இராஜாங்கஅமைச்சர்இந்திக்க அனுருத்த தெரிவித்தார்.

கம்பஹாவில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் யார் வேட்பாளர் என்பது இன்னும் தீர்மானிக்கப்படவில்லைபொதுஜன பெரமுனவே பெரும்பான்மை அரசியல் கட்சியாக உள்ளது. அந்தக் கட்சியின் ஆதரவுடன்தான் ஜனாதிபதிப் பதவியைரணில்விக்கிரமசிங் வகித்து வருகிறார். அவர் பொது வேட்பாளராக அறிவிக்கப்பட்டால் கட்சியின் தீர்மானத்தை மதித்து நாம் செயற்படுவோம். எமது கட்சியின் தீர்மானமே இறுதியானது.

தற்போதைய நிலையில் இளம் தலைவரான நாமல் ராஜபக்சவை தலைமைத்துவத்திற்குக் கொண்டு வருவதற்கு நாம் நாடளாவிய ரீதியில் பயணிக்கின்றோம் அவருடைய தலைமையில் செயல்படுவதற்கு தயாராக உள்ளோம் - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழர்கள் விரும்பும் தீர்வை ஒருபோதும் வழங்க முடியாது

## அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவிப்பு

தமிழ் மக்களும், தமிழ் அரசியல்வாதிகளும் விரும்பும் சமஷ்டி தீர்வையோ அல்லது தனிநாட்டுத் தீர்வையோ ஒருபோதும் வழங்க முடியாது.

இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சர்வகட்சி மாநாடு தீர்வைக் காண்பதற்கான வழியாகும். ஆனால், இந்தக் கூட்டத்தில் பங்கேற்கும் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் இன முரண்பாடுகளை மேலும் வளர்க்கும் விதத்தில் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டிலுள்ள அனைத்து மக்களின் நன்மை கருதியே செயற்படுகின்றார். அவருடன் ஒன்றித்துப் பயணித்து அரசியல் தீர்வைக் காண்பதற்குத் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் முயலவேண்டும். அதைவிடுத்து நடைமுறைக்குச் சாத்தியம் இல்லாத கருத்துக்களை வெளியிட வேண்டாம் என்று அவர்களிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

இந்த நாட்டில் சமஷ்டித் தீர்வுக்கோ அல்லது தனிநாட்டுத் தீர்வுக்கோ நாடாளுமன்றம் ஒருபோதும் அனுமதி வழங்கமாட்டாது.

ஒற்றையாட்சிக்குள் அதிகாரங்களைப் பகிரும் வகையிலான தீர்வே இந்த நாட்டுக்கும் மக்களுக்கும் பிரச்சினை இல்லாத தீர்வு ஆகும். - என்றார். (02)



# சர்வதேச அழுத்தமூடாகவே தீர்வை நோக்கி நகரமுடியும்

## வலிந்து காணாமலாக்கப்பட்டோர் உறவுகள் சங்கம் அறிக்கை

இலங்கை அரசாங்கத்தால் தற்போதும் தமிழ்மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்டுவரும் கட்டமைக்கப்பட்ட இனவழிப்பைத் தடுப்பதற்கு சர்வதேச சக்திகள் அழுத்தம் பிரயோகிக்கவேண்டும். அதன்மூலமாகவே அரசியல் தீர்வை நோக்கி நகரக்கூடிய புறச்சூழ்நிலை உருவாகும் என்று வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

இது தொடர்பாக வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பவை வருமாறு -

தமிழ்மக்களுக்கு எதிராக இனவழிப்பை மேற் கொண்டுவரும் சிங்களப்பேரினவாதம் மனிதப்புதைகுழிகளையே தமிழ்மக்களுக்குப் பரிசாகக் கொடுத்துள்ளது.

செம்மணியில் ஆரம்பித்த மனிதப்புதைகுழி இன்று கொக்குத்தொடுவாய் வரை நீண்டுள்ளது. 1984 ஆம் ஆண்டின் பின்னர் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்த கொக்குத்தொடுவாய் பிரதேசத்தில் போர் முடிவுக்குக்கொண்டு வரப்பட்டதன் பின்னரே மக்கள் குடியேற்றப்பட்டனர்.

மன்னார் திருக்கேதீஸ்வரம் மனிதப்புதைகுழி தொடர்பான வழக்கு நீண்டகாலமாக உண்மை கண்டறியப்படாமல் இலங்கைப் பேரினவாத அரசின் நீதித்துறையால் மூடிமறைக்கப்பட்டுவருகின்றது.

எனவே முல்லைத் தீவு மாவட்டத்தின் கொக்குத் தொடுவாய் பகுதியில் உள்ள மனிதப்புதைகுழி அகழ்வுப்பணிகள் சர்வதேச நியமத்தின்படி, சர்வதேசக் கண்காணிப்புடன் முன்னெடுக் கப்படவேண்டும்.

அதுமாத்திரமன்றி தற்போதும் தமிழ்மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்டுவரும் கட்டமைக்கப்பட்ட இனவழிப்பைத் தடுப்பதற்கு சர்வதேச சக்திகள் அழுத்தம் பிரயோகிக்கவேண்டும்.

குறிப்பாக வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான சர்வதேச விசாரணைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படுவதுடன், பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நீதி வழங்கப்படவேண்டும். இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்ட தமிழ்மக்களுக்குச் சொந்தமான நிலங்கள் விடுவிக்கப்படவேண்டும். நீண்டகாலமாக தடுத்துவைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகள் எவ்வித நிபந்தனைகளுமின்றி உடனடி யாக விடுதலைசெய்யப்பட வேண்டும்.

மேலும் தமிழ்மக்கள் செறிந்துவாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்றுவரும் பௌத்த சிங்களமயமாக்கல் மற்றும் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள் தொல்லியல் திணைக்களத்தால் கையகப்படுத்தப்படல் என்பன முடிவுக்குக்கொண்டு வரப்படவேண்டும். ஊடகவியலாளர்கள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகள் நிறுத்தப்படவேண்டும். இவையனைத்தும் உரியவாறு நிறைவேற்றப்படும் பட்சத்தில்தான் அரசியல் தீர்வை நோக்கி நகரக்கூடிய புறச்சூழ்நிலை உருவாகும் என்று அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (05)



# வெளிப்படைத்தன்மை வாய்ந்த கடன் மறுசீரமைப்பு அவசியத்தை வலியுறுத்தினார் ஜப்பான் அமைச்சர்

அனைத்துக் கடன்வழங்குநர் நாடுகளையும் உள்ளடக்கிய வெளிப்படைத்தன்மை வாய்ந்த உச் செயன்முறையின் அவசியம் குறித்து இலங்கை அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ள ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் ஹயாஷி யொஷிமஸா, கடன்மறுசீரமைப்பு செயன்முறையில் மேலும் முன்னேற்றத்தை எதிர்பார்ப்பதாகத் தெரிவித்துள்ளார்.

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வருகைதந்துள்ள ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் ஹயாஷி யொஷிமஸா மற்றும் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஆகியோரின் கூட்டு ஊடக சந்திப்பு சனிக்கிழமை கொழும்பிலுள்ள அயலுறவுத்துறை அமைச்சில் நடைபெற்றது.

அங்கு கருத்து வெளியிட்ட அமைச்சர் ஹயாஷி யொஷிமஸா மேலும் தெரிவித்ததாவது:

ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் என்ற ரீதியில் கடந்த 4 வருடங்களில் முதற்தடவையாகவும், எனது வாழ்வில் முதன்முறையாகவும் இலங்கைக்கு விஜயம் செய்வதையிட்டு மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். எமது இருநாடுகளுக்கும் இடையிலான உறவு 19 ஆம் நூற்றாண்டிலேயே ஆரம்பமாகிவிட்டது.

அந்தக் காலப்பகுதியில் நவீன ஜப்பானைக் கட்டியெழுப்பிய பல முக்கிய நபர்கள் ஐரோப்பாவுக்கான தமது விஜயத்தின்போது கொழும்பிலேயே தங்கிச் சென்றனர். இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் 1951 ஆம் ஆண்டு சான்பிரான்சிஸ்கோ நகரில் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன ஆற்றிய உணர்வுபூர்வமான உரையை ஜப்பானியர்களால் மறக்கமுடியாது. அது சர்வதேச அரங்கினுள் ஜப்பான் மீண்டும் பிரவேசிப்பதற்கான அடித்தளமாக அமைந்தது. அப்போதிருந்து ஜப்பான் இலங்கையுடன் மிகநெருக்கமாகப் பணியாற்றிவருகின்றது. எதிர்வருங்காலங்களிலும் இலங்கைக்கு அவசியமான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு ஜப்பான் விரும்புகின்றது.

அதன்படி சனிக்கிழமை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்தித்தேன். ஓராண்டுக்குள் அவர் ஜப்பானுக்கு இருமுறை விஜயம் மேற்கொண்டமையானது இருநாடுகளுக்கும் இடையில் ஆழமடைந்துவரும் நல்லுறவுக்கான அடையாளமாகக் காணப்படுவதாக நான் அவரிடம் கூறினேன். மேலும் ஜப்பான் - இலங்கைக்கு இடையிலான இருதரப்பு உறவை வலுப்படுத்துவது குறித்து அமைச்சர் அலி சப்ரியுடன் விரிவாகக் கலந்துரையாடினேன்.

இலங்கை இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில் அமைந்திருக்கின்றது. அதுமாத்திரமன்றி 'சுதந்திரமான மற்றும் திறந்த இந்திய -பசுபிக் பிராந்தியத்தை' உறுதிப்படுத்துவதில் இலங்கை முக்கிய பங்காளியாகத்திகழ்கின்றது. அதன்படி ஜப்பான் பிரதமரால் கடந்த மார்ச் மாதம் வெளியிடப்பட்ட சுதந்திரமான மற்றும் திறந்த இந்திய - பசுபிக் பிராந்தியம்' குறித்த புதிய திட்டம் பற்றி அமைச்சர் அலி சப்ரியிடம் விளக்கமளித்தேன். அதேபோன்று எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் இலங்கை தலைமைதாங்கவுள்ள இந்துசமுத்திரப பிராந்தியரிம் அமைப்புடனான ஜப்பானின் ஒத்துழைப்பு தொடர்பிலும் எடுத்துரைத்தேன்.

மேலும் கடன்மறுசீரமைப்புச் செயன்முறையில் அடுத்தகட்ட முன்னேற்றத்தை எதிர்பார்ப்பதாகத் தெரிவித்ததுடன், அனைத்துக் கடன்வழங்குநர் நாடுகளையும் உள்ளடக்கிய வெளிப்படைத்தன்மை வாய்ந்த கடன்மறுசீரமைப்புச் செயன்முறையின் அவசியத்தை வலியுறுத்தினேன்.

ஊழல் ஒழிப்புக்கான முயற்சிகள் மற்றும் கொள்கைவகுப்புச் செயன்முறையில் வெளிப் படைத்தன்மை என்பன உள்ளடங்கலாக சர்வதேச நாணய நிதியத்துடன் எட்டப்பட்ட இணக்கப்பாட்டின்கீழ் இலங்கையால் முன்னெடுக்கப்பட்டு வரும் முயற்சிகள் வரவேற்கத்தக்கவையாகும். அதேபோன்று தேசிய நல்லிணக்கம் தொடர்பான இலங்கையின் முயற்சிகள் பாராட்டத்தக்கவை என்பதுடன், அம்முயற்சிகளுக்கு ஜப்பான் ஒத்துழைப்பு வழங்கத்தயாராக உள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் தற்போதைய நெருக்கடிகளிலிருந்து இலங்கை வெகுவிரைவில் மீட்சியடையும் என்றும், பொரு ளாதார அபிவிருத்தி மற்றும் இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் மத்திய நிலையம் ஆகியவற்றை நோக்கிய பாதையில் மீண்டும் பயணிக்கும் என்று நம்புகின்றோம் என்று தெரிவித்தார். (05)

# சென்னை விமான நிலையத்தில் இரு இலங்கை பயணிகள் இறப்பு

சென்னை சர்வதேச விமான நிலையத்தில் வெள்ளிக்கிழமை ஒரே நாளில் இலங்கையைச் சேர்ந்த இரண்டு பயணிகள் அடுத்தடுத்து மாரடைப்பால் மயங்கி விழுந்து உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சென்னை மீனம்பாக்கம் ஒருங்கிணைந்த பன்னாட்டு விமான முனையத்தில் இருந்து இலங்கை யாழ்ப்பாணத்திற்கு அலையன்ஸ் ஏர் விமானம் வெள்ளிக்கிழமை காலை புறப்படத் தயாராக இருந்தது.

விமானத்தில் பயணிக்க வந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிவகஜன் லிட்டி (வயது – 43) என்ற பெண், பாதுகாப்பு சோதனை பிரிவில் திடீரென மயங்கி விழுந்தார். உடனடியாக விமான நிலைய மருத்துவக் குழுவினர் வந்து பரிசோதனை செய்தனர்.

அப்போது, அவர் மாரடைப்பால் உயிரிழந்து விட்டார் எனத் தெரிவித்தனர்.

இதேபோல், கொழும்பில் இருந்து ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானம் சென்னைக்கு வந்தது.

அந்த விமானத்தில், இலங்கையைச் சேர்ந்த ஜெயக்குமார் (வயது – 48) என்பவர் தனது மனைவியுடன் வியாபார விசாவில் சென்னைக்கு சென்றார்.

அவர் குடியுரிமை சோதனை முடித்து விட்டு சுங்கச் சோதனை பிரிவுக்கு வந்து கொண்டு இருந்தபோது திடீரென மயங்கி விழுந்தார். விமான நிலைய மருத்துவ குழுவினர் வந்து பரிசோதனை செய்ததில் அவரும் மாரடைப்பால் உயிரிழந்து விட்டார் எனத் தெரி வித்தனர்.

இதுபற்றி விமான நிலைய பொலிஸார் வழக்குப்பதிவு செய்து, 2 பேரின் உடல்களையும் பிரேத பரிசோதனைக்காக குரோம்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், இலங்கை பயணிகள் உயிரிழந்தது பற்றி சென்னையில் உள்ள இலங்கை தூதரக அதிகாரிகளுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது. (05)

## உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு

# தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் ஆதரவை பெறவேண்டியது அவசியம்

## அலி சப்ரியிடம் வலியுறுத்தினேன் என்கிறார் ஜெஹான் பெரேரா

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிக்கும் செயன்முறையில் தமிழ்த்தேசிய கட்சிகளின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் முழுமையாகப் பெறவேண்டியது மிகவும் அவசியமெனபலமுறைதான் அமைச்சர் அலி சப்ரியிடம் வலியுறுத்தியிருப்பதாக தேசிய சமாதானப்பேரவையின் தலைவரும், சிவில் சமூக செயற்பாட்டாளருமான கலாநிதி ஜெஹான் பெரேரா தெரிவித்தார்.

அரசாங்கம் ஸ்தாபிப்பதற்குத் திட்டமிட்டிருக்கும் உத்தேச உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தலைமையிலான குழுவினருக்கும் சிவில் சமூகப்பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று கடந்த 11 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. அதன் தொடர்ச்சியாக சிவில் சமூக மற்றும் தொழிற்சங்கப்பிரதிநிதிகளுடனான இரண்டாம்கட்ட சந்திப்பு கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

இந்தச் சந்திப்பிலும் கடந்த சந்திப்பைப்போன்று தாம் ஸ்தாபிப்பதற்கு உத்தேசித்துள்ள உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் அமைச்சர் அலி சப்ரியால் விளக்கமளிக்கப்பட்டது. அது மாத்திரமன்றி உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு பற்றிய சட்டமூலத்தின் உள்ளடக்கம் குறித்த ஆலோசனைகளை சமர்ப்பிக்குமாறும் சிவில் சமூகப்பிரதிநிதிகளிடம் கோரப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில், இதற்கு எதிர்ப்புகள் வரக்கூடுமென அறிந்திருந்த போதிலும் அரசாங்கம் துணிச்சலாக இம்முயற்சியை மேற்கொள்வதைப் பாராட்டவேண்டுமெனத் தெரிவித்த ஜெஹான் பெரேரா, சிவில் சமூக மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடனான சந்திப்புக்களின் மூலம் இம்முயற்சிக்குப் பரந்துபட்ட ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் எதிர்பார்ப்பதாகவும் சுட்டிக் காட்டினார்.

மேலும் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான ஆலோசனைகள் சிவில் சமூகப்பிரதிநிதிகளிடம் கோரப்பட்டுள்ள நிலையில், அவ்வாறு வழங்கப்படும் யோசனைகளை அரசாங்கம் அதன் வரைவில் உள்ளடக்குமா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும் என்று வலியுறுத்திய அவர், தற்போது நிறுவப்பட்டுள்ள உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கான இடைக்கால செயலகத்துக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள நபரைத் தமக்குத் தெரியாது என்றும், அவரைவிட மிகப்பொருத்தமான மேலும் பல நிபுணர்கள் இருக்கக்கூடும் என்றும் குறிப்பிட்டார்.

அதேவேளை இந்த ஆணைக்குழுவை ஸ்தாபிக்கும் செயன்முறையில் தமிழ்த்தேசிய கட்சிகளின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் முழுமையாகப் பெறவேண்டியது இன்றியமையாதது என்று பல தடவைகள் தான் அமைச்சர் அலிசப்ரியிடம் எடுத்துரைத்திருப்பதாக ஜெஹான் பெரேரா தெரிவித்தார்.

இருப்பினும் இவ்வாறான பொறிமுறைகளில் சர்வதேச நீதிபதிகள் மற்றும் கண்காணிப்பாளர்கள் உள்வாங்கப்படவேண்டும் என்று தமிழர் தரப்பு தொடர்ச்சியாக வலியுறுத்திவரும் பின்னணியில், இந்த விடயம் குறித்து தமிழ்த் தேசிய கட்சிகளின் பிரதிநிதிகளுடன் முதலில் பேச்சு நடத்தினால், அச்செயன்முறை அந்த இடத்திலேயே தேங்கி நின்றுவிடும் என்று அரசாங்கம் கருதக்கூடும் என்று சந்தேகம் வெளியிட்ட அவர், யதார்த்த ரீதியாக நோக்குகையில் சிங்கள மக்கள் மத்தியிலிருந்து எழக்கூடிய எதிர்ப்புக்கு மத்தியில் வெளிநாட்டு நீதிபதிகளை உள்வாங்குவது சாத்தியமில்லை என்று விளக்கமளித்தார்.

ஆனால் இப்பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகளுக்குப் பதிலாக இலங்கையிலும் பிறிதொரு நாட்டிலும் இரட்டைப்பிரஜாவுரிமையைக் கொண்டிருக்கும் தகுதிவாய்ந்த நபர்களை உள்வாங்குவது குறித்துப் பரிசீலிக்கலாம் என்ற யோசனையையும் முன்வைத்தார்.

மேலும் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் இதுவரையில் தம்மோடு கலந்துரையாடல்களை நடத்திய அனைத்து வெளிநாட்டு இராஜதந்திரி களும் இப்பொறிமுறை அனைத்துத்தரப்பினரையும் உள்ளடக்கியதாகவும் வெளிப்படைத்தன்மை வாய்ந்ததாகவும் இருக்கவேண்டியது அவசியம் என்று வலியுறுத்தியதாகவும் அவர் தெரிவித்தார். (05)

# தாயை அடித்துக் கொலை செய்த தந்தையுடன் மகனும் சேர்ந்து சடலத்தை புதைத்த கொடூரம்

ரிதிமாலியத்த, இரணஹல்பொல பகுதியில் பெண்ணொருவர் அடித்துக்கொலைசெய்யப்பட்டு புதைக்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

டபிள்யூ.எம். சோமாவதி என்ற 50 வயதான பெண்ணே இவ்வாறு கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 2021ஆம் ஆண்டு முதல் குறித்த பெண் காணாமல்போயுள்ளார் என சந்தேகநபர்கள் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்தவிடயம் தொடர்பில் பொலிஸார் முறைப்பாடு செய்த சந்தேகநபர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதன் போது குறித்த பெண் தாக்கப்பட்டு கொலைசெய்யப்பட்டு புதைக்கப்பட்ட தகவல் சந்தேக நபர்களிடம் இருந்து வெளியாகியுள்ளது.

கொலை செய்யப்பட்ட பெண்ணுக்கும் அவருடைய கணவனுக்கும் ஏற்பட்ட வாக்குவாதம் கைகலப்பாக மாறிய நிலையில் பெண் தாக்கப்பட்டு உயிரிழந்த நிலையில், சடலத்தை மூத்த மகனின் உதவியுடன் கணவன் தோட்டத்தில் புதைத்ததாக விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது

சம்பவம் தொடர்பில் உயிரிழந்த பெண்ணின் கணவர் (வயது 70), அவருடைய மூத்த மகன் (வயது 26) ஆகியோர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## துரித நடவடிக்கை அவசியம்

வவுனியா மாவட்டம் தோணிக்கல்லில் வீட்டுக்குள் புகுந்து இருவரைக் கொன்றும் மேலும் 8 பேரைக் காயப்படுத்தியும் நடத்தப்பட்ட திட்டமிடப்பட்ட தாக்குதல் சம்பவம் இடம்பெற்று ஒரு வார காலமாகியும் எந்தவொரு சந்தேகநபர்களும் கைது செய்யப்படவில்லை. கொல்லப்பட்ட இருவரும் கொழும்பிலிருந்து பிறந்த நாள் நிகழ்வு ஒன்றுக்காக வவுனியாவுக்கு வந்திருந்த அன்றைய இரவு அவர்கள் வெட்டியும் எரித்தும் கொல்லப்பட்டுள்ளார்கள். அதுமட்டுமன்றி வீட்டில் இருந்த சிறுவர்கள், குழந்தைகளும்கூட வாள்வெட்டுக் காயங்களுக்கு இலக்காகும் அளவிற்குக் கொலை வெறித் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. அனாலும் அதனைச் செய்தவர்களைக் கைது செய்ய முடியாமல் இருக்கிறது காவல்துறை.

கொல்லப்பட்டவர் குற்றப் பின்னணியைக் கொண்டவர் என்றும்அதனால்அதிக எண்ணிக்கையில்எதிரிகளைச் சம்பாதித்து வைத்திருந்த அவர் கொழும்பில் தலைமறைவாகி இருந்தார் என்றும் வவுனியாவுக்கு வந்திருந்த நிலையில் கொல்லப்பட்டார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. தாக்குதல் நடத்தப்பட்ட வீட்டில் இருந்த சிசிரிவி கமெராக்களில் தாக்குதலாளிகள் முகமூடிகள் இன்றி நடமாடுவது பதிவாகியிருக்கின்றது என்றபோதும் சந்தேகநபர்களை அடையாளம் காணவோ கைது செய்யவோ காவல்துறையினரால் முடியவில்லை.

அண்மைக்காலங்களாக இதுபோன்றசம்பவங்களில் பழிக்குப் பழி வாங்குவதற்காகவே கொலையாளிகளை அல்லது தாக்குதலாளிகளை அடையாளம் காட்டாமல் விடும் நிலமைகள் அதிகரித்திருக்கின்றன என்கிற ஆபத்தான, அச்சுறுத்தக்கூடிய தகவல்கள் வருகின்றன. தமிழ் திரைப் படங்களில் வருவதைப் போன்று தாக்கியவர்களைத் தாங்களே பழிவாங்கவேண்டும் என்கிற வெறியில் குற்றவாளிகளை அடையாளப்படுத்த பாதிக்கப்பட்ட தரப்பினர் மறுப்பதும் காவல்துறையினருக்கு ஒத்துழைக்கமறுப்பதும் வழக்கமாகிவருகின்றது என்பதும் மிக மோசமான சூழலுக்குக் கட்டியம் கூறுகின்றது.

சில நாள்களுக்கு முன்னர் நெடுங்கேணியில் ஒருவர் வீட்டுக்குள் புகுந்து சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவமும் இதுபோன்ற பழிவாங்கும் தாக்குதலே என்று தெரிவிக்கப்படுகின்றது. தமது தரப்பில் ஒருவரைக் கொன்ற சந்தேகநபரை நன்கு தெரிந்திருந்தும் நீதிமன்றத்தில் அவரை அடையாளம் தெரியாது என்று கூறி அவருக்குப் பிணை வழங்கக்கூடிய நிலையை ஏற்படுத்தி, அவர் பிணையில் வெளியே வந்த பின்னர் காத்திருந்து கொலை செய்துள்ளனர் என்று கூறப்படுகின்றது.

காவல்துறையினர் உரிய நீதியை நிலைநிறுத்துவார்கள் என்கிற நம்பிக்கை இழக்கப்பட்டதன் விளைவாகவே இவ்வாறு ஒருவரை ஒருவர் பழிவாங்கும் வகையில் தாக்குதல்கள் நடத்தப்படுவதற்குக் காரணம். இந்த நிலமை அதிகரித்தால் வடக்கில் சட்டம் ஒழுங்கு மிக மோசமாகச் சீர்குலையும் அபாயம் இருக்கின்றது. ஒருவரை ஒருவர் வெட்டிக் கொண்டும் சுட்டுக்கொண்டும் பழிக்குப் பழி என்று புறப்பட்டால், வாழமுடியாத ஓரிடமாக வடக்கு மாறும் வாய்ப்புக்களை மறுக்க முடியாது.

வடக்கில்பணியாற்றும்காவல்துறைஉயரதிகாரிகளுக்கு தமிழ் மொழியறிவு இன்மை, தமிழர்கள் காலவ்துறை உயர் பதவிகளில் போதியளவில் இல்லாமை, உயரதிகாரிகளில் மட்டுமன்றி காவல்துறையினரிலேயே பெருமளவிலானோர் வேறு மாவட்டங்களைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றமை என்பவற்றின் காரணமாகவே இந்த நிலமை ஏற்படுகின்றது என்பது வெளிப்படை. பழிக்குப் பழி என்கிற நிலமையைச் சீர்ப்படுத்திசட்டம்ஒழுங்கைவடக்கில்நிலைநாட்டுவதாயின் உடனடியாக இந்த நிலமைகளில் மாற்றங்கள் கொண்டுவரப்படவேண்டும். இல்லையேல் பழிக்குப் பழி என்று ஒருவரை ஒருவர் வெட்டிக்கொண்டு சாகும் நிலையே உருவாகும்.

குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பது மட்டுமன்றி அவர்களுக்கு உரிய வகையில் தண்டனை பெற்றுத் தரப்படுவதும் முக்கியம். அதுவே மக்களிடம் சட்டம் ஒழுங்குத்துறை மீது நம்பிகையைக் கட்டியெழுப்பத் துணை நிற்கும்.

# ஆப்கானில் ஆஸி படைகளின் போர்க்குற்றம்; ஊடகங்களின் சாட்சியும் முறைதவறா நீதியும்

ஐங்கரன் விக்கினேஸ்வரா







ஆஸ்திரேலிய விசேட படைப் பிரிவினர் இழைத்த போர்க்குற்றங்கள் குறித்துஇடம்பெற்ற விசாரணைகளின் முடிவை - ஆஸ்திரேலிய பாதுகாப்பு படை-2020இல்வெளியிட்டது. ஆஸ்திரேலியாவின் விசேட படைப் பிரிவினர்ஆப்கானிஸ்தானில் 39 பொதுமக்களை கொலை செய்தனர் என்ற அதிர்ச்சி தகவல்விசாரணை மூலம் வெளியாகியது.

ஆப்கானில் 57 சம்பவங்கள் தொடர்பில் 300க்கும் அதிகமானவர்களிடம்மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் முடிவில் இந்த அறிக்கை வெளியாகியது. 25படையினர் குற்றங்களில் ஈடுபட்டுள்ளனர் அல்லது குற்றங்களிற்குஉதவியுள்ளனர் என விசாரணை அறிக்கை தெரிவித்தது.

2009 முதல் 2013 வரை சிறைக் கைதிகள், விவசாயிகள், பொதுமக்களைக் கொலைசெய்தமைக்காக 19 முன்னாள் மற்றும் தற்போதைய படையினரை விசாரணைசெய்யவேண்டும் என விசாரணை அறிக்கை பரிந்துரை செய்தது. ஆஸ்திரேலியாவின் விசேட வான்சேவை படையணியை சேர்ந்தவர்களே இந்தப் போர்க்குற்றங்களில்ஈடுபட்டுள்ளனர் என்றும் தெரிய வந்தது.

**பென்ராபர்ட்ஸ்-ஸ்மித் வழக்கு**

ஆஸ்திரேலிய படைகளால் செய்யப்பட்டதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள்குறித்து இந்த நாடு தீவிர கவனம் செலுத்தியது சமீபத்தில்தான் என்றுசிறப்பு புலனாய்வாளரும் முன்னாள் நீதிபதியுமான மார்க்



வெய்ன்பெர்க்மெல்போர்னில் பத்திரிகையாளர்களிடம் கூறினார்.

எனக்குத் தெரிந்தவரை, ஆஸ்திரேலிய நீதிமன்றம் அல்லது இராணுவநீதிமன்றத்தால் எந்தவொரு ஆஸ்திரேலியப் படையினரும் எப்போதாவது கடுமையானபோர்க் குற்றமாக கருதக்கூடிய எந்தவொரு குற்றத்திற்காகவும்தண்டிக்கப்படவில்லை'' என்றும் அவர் கூறினார்.

பென் ராபர்ட்ஸ்-ஸ்மித் வழக்கின் தீர்ப்பிற்குப் பிறகும் அந்த வார்த்தைகள்உண்மையாகவே இருக்கின்றன. ஆயினும்கொலையாளி மற்றும் போர்க் குற்றவாளிஎன்ற வார்த்தைகள் செய்தித்தாள் முகப்புப் பக்கங்களில் அதிகமாகத் தெறித்தன.

**போர்க்குற்றத்தில் ஆஸ்திரேலிய படை**

நியூயோர்க் இரட்டைக்கோபுரம் 2001 செப்டம்பரில் தாக்குதலுக்கு உள்ளாகியது.அதனால் மூவாயிரம் வரையான மக்கள் கொல்லப்பட்டனர். அதனால் அமெரிக்காமட்டுமல்ல, உலகமே அதிர்ச்சிக்குள்ளாகியது.

இத்தாக்குதலைஆப்கானில்உள்ள அல்குவைதாவினரேசெய்தனர்என்றும் அவர்களுக்குப் பாதுகாப்பும் புகலிடமும் தந்து தலிபான்களே பாதுகாத்தனர் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டது. அதன் விளைவாக தலிபானுக்கு எதிரான அமெரிக்காவின் போர் தொடங்கியது.

அமெரிக்காவுடன் கூட்டாளிகளாக இணைந்த ஆஸ்திரேலியத் துருப்புக்கள் 2002இல் ஆப்கானிஸ்தானில் களம் புகுந்தன.அந்தக் காலத்திலேயே ஆஸ்திரேலியப் படைகள் ஆப்கானில் போர்க் குற்றங்களில் ஈடுபட்டன என்ற குற்றச்சாட்டு எழத் தொடங்கியது.

**போரின் வெட்கக்கேடான பதிவுகள்**

இக் குற்றச் சாட்டுக்களையடுத்து நவம்பர் 2020இல் அவுஸ்திரேலியா குறைந்தது10 சிறப்புப் படை வீரர்களுக்கு பணி நீக்கம் தொடர்பான அறிவித்தலைஅனுப்பியது. இதனை அந்நாட்டு ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (ABC)உறுதிப்படுத்தி அறிவித்துள்ளது.

இந்த விசாரணைகளின்போது ஒரு போர் வீரக் கலாச்சாரத்தின் வெட்கக்கேடானபதிவுகள் வெளியாகியுள்ளன என ஆஸ்திரேலிய பாதுகாப்பு படையின் (ADF) தலைவர்தெரிவித்தார். இந்தக் கொலைகள் எவற்றையும் மோதலின் உச்சகட்டத்தின் போதுநிகழ்ந்தவைகள் என தெரிவிக்க முடியாது என்றும் தெரிவித்தார்.

குற்றவாளியின் நோக்கம் தவறானதாகவோ தெளிவற்றதாகவோ அல்லதுகுழப்பமானதாகவோயிருந்த தருணத்தில் இந்த குற்றங்கள் நிகழ்வில்லை என அவர்தெரிவித்துள்ளார்.

நாங்கள் விசாரணைகளை மேற்கொண்ட ஒவ்வொருவரும் யுத்த சட்டங்கள் எவ்வாறுபோரிடவேண்டும் என்பதை நன்கு அறிந்தவர்கள் எனவும் தெரிவித்துள்ளார். சில விசேட படைப்பிரிவினர் சட்டத்தினை தங்கள் கைகளில் எடுத்தனர் எனவும்அவர் தெரிவித்துள்ளார்.

**சட்டவிரோதமான கொலைகள்**

பத்து வீரர்களை பணிநீக்கம் செய்த ஆஸ்திரேலிய நடவடிக்கையானது ஆப்கானிஸ்தானில் மேற்கொள்ளப்பட்ட சட்டவிரோதமான கொலைகளுக்கானநம்பத்தகுந்த ஆதாரங்களை உள்ளடக்கிய அறிக்கை வெளியாகி பரபரப்பை ஏற்படுத்திய பின்னர் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2005 மற்றும் 2016 க்கு இடையில் ஆப்கானிஸ்தானில் அவுஸ்திரேலிய சிறப்புப் படை வீரர்களின் நடத்தை குறித்துநீண்டகாலமாகஎதிர்பார்க்கப்பட்ட விசாரணையின் தொகுப்புகளை விவரித்த ஜெனரல் அங்கஸ் ஜோன் காம்ப்பெல், போரின் மத்தியில் படுகொலைகள் இடம்பெற்றதாற்கான ஆதராங்கள் உள்ளதாகவும் கூறினார்.

இந்தச் சம்பவத்திற்கு பொறுப்பானர்வர்களில் சிலர் இன்னும் ஆஸ்திரேலிய இராணுவத்தில் பணியாற்றி வருகின்றனர்எனவும்,இந்தக்கொலைகள் விரைவில் நியமிக்கப்படவுள்ள சிறப்பு புலனாய்வாளருக்குபரிந்துரைக்கப்படும் என்றும் காம்ப்பெல் அப்போது குறிப்பிட்டார்.

இரண்டாம் உலகப் போரின் பின்னர், வியட்நாமில் Mù Lai மைலாய் படுகொலைக்காக அமெரிக்க இராணுவ லெப்டினன்ட்

வில்லியம் காலே 22 தென் வியட்நாம் பொதுமக்களைக் கொன்றதற்காக வழக்குத் தொடரப்பட்டது. அதன்பின் 2003 இல் ஈராக்கில் அபு கிரைப் சிறை துஷ்பிரயோகம், அமெரிக்க வீரர்கள் சார்லஸ் கிரானர், லின்டி இங்கிலாந்து மற்றும் பலர் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டனர்.

2006 இல் 14 வயது ஈராக் சிறுமியை வன்புணர்வு செய்து கொலை செய்ததற்காகவும், அவரது குடும்பத்தினரைக் கொன்றதற்காகவும் அமெரிக்க துருப்புக்கள்மீதுவழக்குத்தொடரப்பட்டது.

2007இல் நான்கு அமெரிக்க பிளாக்வாட்டர் தனியார் இராணுவ ஒப்பந்தக்காரர்களால் 17 ஈராக் குடிமக்கள் கொல்லப்பட்டமைக்கும் வழக்குத் தொடரப்பட்டது.

201இல் மூன்று ஆப்கானிஸ்தான் குடிமக்களை கொலை செய்ததற்காக அமெரிக்க துருப்புக்கள் தண்டிக்கப்பட்டனர். 201ல் காந்தகார் படுகொலை என்று அழைக்கப்படும் - 16 ஆப்கானிஸ்தான் குடிமக்களை கொலை செய்ததற்காக அமெரிக்க இராணுவதுப்பாக்கிசுடும்ராபர்ட் பேல்ஸ் மீது வழக்குத் தொடரப்பட்டது. இப் போர்க்குற்ற நிகழ்வுகள் அமெரிக்காவை போரில் பொறுப்புக்கூறலை சர்வதேச போர்க்குற்றவியல் வேண்டியது. மேலே பட்டியலிடப்பட்டுள்ள போர்க்குற்ற வழக்குகள் அமெரிக்காவால் நிராகரிக்கப்பட்டன.

ஈராக் படையெடுப்பிற்கு ஜார்ஜ் டபிள்யூ. புஷ் நிர்வாக உறுப்பினர்கள் மீது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் சேர்க்கப்பட்ட வழக்கை அமெரிக்கா நிராகரித்து மறுத்துவிட்டது. ஆயினும் இதற்கு மாறாக போர்க்குற்ற அறிக்கை வெளியானபின்னர் ஆஸ்திரேலியாவின் அன்றைய சிரேஷ்ட இராணுவ அதிகாரியான ஜெனரல் அங்கஸ் ஜோன் காம்ப்பெல், ஆப்கானிஸ்தானிடம் மன்னிப்புக் கோரிமையும் குறிப்பிடத்தக்கது.

தற்போது அவுஸ்திரேலிய பத்திரிகைகளிலும் ஊடகங்களிலும் சூடு பிடித்துள்ள இப் போர்க்குற்ற விவகாரம் குற்றஞ்சாட்டப்பட்ட போர்க்குற்றவாளி பென் ராபர்ட்ஸ்-ஸ்மித்தின் விக்டோரிய விருதை மீளப் பெறவும் பலர் கோரியுள்ளனர்.

காலங் கடந்தாவது உண்மை வெளிச்சத்திற்குவந்ததாகபென்ராபர்ட்ஸ்-ஸ்மித்தின் அவதூறு விசாரணையின் முடிவு வெளிவந்துள்ளது.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 390/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swehpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# 13ஐ ஆட்சியாளர்கள் நடைமுறைப்படுத்தினால் செய்யவேண்டியதை நாம் பார்த்துக்கொள்வோம்

## எல்லே குணவங்ச தேரர் எச்சரிக்கை



ஒரு தரப்பினரின் பிரச்சினைகளுக்கு மாத்திரம் தீர்வுகாண அரசாங்கம் முயற்சிப்பதைக் கடுமையாக எதிர்ப்போம். முதலில் 13 ஆவது திருத்த அமுலாக்க திட்டத்தை அரசாங்கம் கொண்டு வரட்டும், அதன் பின் செய்ய வேண்டியதை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் என தேசிய வளங்களை பாதுகாக்கும் அமைப்பின் தலைவர் எல்லே குணவங்ச தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்தினால் இனப் பிரச்சினைக்கு தீர்வு காணலாம் என அரசாங்கம் குறிப்பிடுகிறது. நாட்டில் முதலில் இனப்பிரச்சினை என்பதொன்று உள்ளதா? என்பதை அரசாங்கம் நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். இல்லாத பிரச்சினைகளுக்கு தீர்வு தேடுவது தற்போதைய பிரச்சினைகளுக்கு பிரதான காரணியாக உள்ளது.

நாட்டு மக்கள் அனைவருக்கும் ஏதாவதொரு பிரச்சினை உள்ளது. வங்குரோத்து நிலைக்கு மத்தியில் ஒரு தரப்பினரது பிரச்சினைகளுக்கு மாத்திரம் தீர்வு காண அரசாங்கம் முயற்சித்தால் அதை கடுமையாக விமர்சிப்போம். அரசமைப்பின் 13 ஆவது திருத்த அமுலாக்க திட்டத்தை அரசாங்கம் முதலில் கொண்டு வரட்டும் அதன் பின் செய்ய வேண்டியதை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்.

தேசியநல்லிணக்கத்தை உறுதிப்படுத்த அரசமைப்பின் 13ஆவதுதிருத்தத்தைஅமுல் படுத்த வேண்டிய தேவை ஏதும் கிடையாது. அரசியல்வாதிகள் தங்களின் குறுகிய அரசியல் நோக்கத்துக்காக முரண்பாடுகளைத் தோற்றுவிக்காமல் இருந்தால் பிரச்சினைகள் தோற்றம் பெறாது.

அரச நிறுவனங்களை மறுசீரமைப்பதாகக்குறிப்பிட்டுக் கொண்டுதேசியவளங்களை தனியார் மயப்படுத்த அரசாங்கம் முயற்சிக்கிறது. இருக்கும் வளங்களை விற்பது, கடன் பெறுவது ஆகியன மாத்திரம் அரசாங்கம் பொருளாதார கொள்கையாக காணப்படுகிறது. தேசிய வளங்களை தனியார் மயப்படுத்தும் அரசாங்கத்தின் முயற்சியை நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்துவோம். - என்றார். (05)

# மலையக எழுச்சிப் பயணத்தின் இரண்டாம் நாள் நடைபயணம்

## பேசாலையில் நிறைவு



மலையக எழுச்சிப் பயணத்தின் இரண்டாவதுநாளானசனிக்கிழமைதலைமன்னாரில் ஆரம்பமான நடைபயணம் பேசாலை வெற்றிநாயகி தேவாலயத்தை சென்றடைந்து நிறைவுற்றது. மூன்றாவது நாளான ஞாயிற்றுக்கிழமை மன்னார் நகரை நோக்கி பேரணி நகர்ந்தது.

மலையக மக்களின் 200 வருடகால வரலாற்றை நினைவுகூரும் வகையிலும், மலையகமக்களின்மாண்பைபறைசாற்றும் விதமாகவும் 'வேர்களை மீட்டு உரிமை வென்றிட' என்ற தொனிப்பொருளில், 'மலையக எழுச்சிப் பயணம்' என்ற மகுடத்தில் மாண்புமிகு மலையக மக்கள் கூட்டிணைவால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 16 நாள் தொடர் நடைபயணத்தின் ஆரம்ப நிகழ்வுகள் வெள்ளிக்கிழமை தலைமன்னாரில் அமைந்துள்ள புனித லோரன்ஸ் திருத்தலம் முன்பாக நடைபெற்றன.

அதன் தொடர்ச்சியாக இரண்டாம் நாளான சனிக்கிழமை காலை 6.30 மணியளவில் தலைமன்னார் புனித லோரன்ஸ் திருத்தலத்தில் இருந்து ஆரம்பமான நடைபயணம், ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தவாறு மு.ப. 11.30 மணி யளவில் பேசாலை வெற்றிநாயகி தேவாலயத்தை வந்தடைந்தது.

மலையக மக்கள், மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஏனைய சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், தலைமன்னார் மற்றும் பேசாலை நகரை அண்மித்து வாழும் மக்கள் என சுமார் 800 பேரின் பங்கேற்புடன் வெற்றிநாயகிதேவாலயத்தைவந்தடைந்த பேரணியை, அத்தேவாலயத்தின் அருட்தந்தை வரவேற்றதுடன், அதனைத்தொடர்ந்துவழிபாடுகளும் இடம்பெற்றன.

அதன் பின்னர், பி.ப 3 மணியளவில் பேசாலை முருகன் கோயிலில் பூஜை வழிபாடுகளில் ஈடுபட்ட மக்கள், அதனைத் தொடர்ந்து அப்பிரதேசத்தில் வாழும் மக்களுடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலந்துரையாடல் நிகழ்வில் பங்கேற்றனர். இந்தக் கலந்துரையாடல் நிகழ்வில் 'மலையக எழுச்சிப் பயணம்' ஏற்பாடுசெய்யப்பட்டமைக்கான காரணம், மலையக மக்களின் வரலாறு மற்றும் வாழ்வியல் பின்னணி உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பான தகவல்கள் பகிரப்பட்டன. இந்நிலையில், மூன்றாம் நாளான ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணியளவில் மீண்டும் பேசாலை வெற்றிநாயகி தேவாலயத்துக்கு அண்மையில் இருந்து ஆரம்பமாகும் நடைபயணம், மன்னார் நகர் வரை சென்றடைந்தது. (05)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

SUPERMARKET

4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557



OKAYA
ELECTRIC VEHICLES
dsl
We lead the way...!
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
conditions apply*
இந்தியாவில் வேகமாக வளர்ந்து
வரும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555

காலைக்கதிர் Kalaikkathir

# மீனவர் விவகாரத்தை அரசியலாக்கி நிறைய பேர் குளிர்காய்கின்றார்கள்

## ஜீவன் தொண்டமான் பேட்டி



மீனவர் விவகாரத்தை அரசியலாக்கி நிறையபேர் குளிர்காய்கிறார்கள் என அமைச்சர் ஜீவன் தொண்டமான் நியூஸ் 7 தமிழுக்கு அளித்த சிறப்பு நேர்காணலில் கூறியுள்ளார்.

நேர்காணலில் ஜீவன் தொண்டமான் கூறியவை வருமாறு -

மலையகத் தமிழர் விவகாரத்தில் தமிழ் நாட்டுக்கும் பொறுப்பு உள்ளது. முதலமைச்சர் ஸ்டாலினிடம் கல்வித்துறை சார்ந்து 4 கோரிக்கைகள் முன்வைத்துள்ளோம். 13 ஆவதுசட்டத்திருத்தம்குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலினிடம் பேசியுள்ளோம். இன ரீதியான விவகாரங்கள் குறித்தும் பேசியுள்ளோம். இது தமிழ்நாடு - இலங்கை இடையே புதிய உறவை ஏற்படுத்தும். மீன்பிடிதொழில் மீனவர்களுக்கு வாழ்வாதாரம். மீனவர் விவகாரத்தை அரசியலாக்கி நிறையபேர் குளிர்காய்கிறார்கள். இரண்டு நாடுகளும் பேசினால் தீர்வு காணலாம். இந்த விவகாரம் குறித்து இலங்கை அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துரையாடி முடிவெடுக்கப்படும்.

13 ஆவது திருத்தம் தொடர்பாக சிங்களவர்கள் மத்தியில் தவறான அபிப்பிராயம் உள்ளது. 13 ஆவது சட்ட திருத்தம் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்களுக்குமானது. இலங்கையில் போராட்டங்கள் நடத்துவது சகஜம். ஜனநாயகத்துக்கு ரணில் விக்ரமசிங்கே முக்கியத்துவம் கொடுக்கின்றார். மலையகத் தமிழர்கள் ஒவ்வொரு நாளும் போராடி வருகிறார்கள். இலங்கை வடக்கு - கிழக்கு தொடர்பாக செயல்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள், ஆக்கிரமிக்கப்பட்ட காணிகள், தமிழ்நாட்டில் முகாம்களில் வாழும் அகதிகள் தொடர்பாக செயல் திட்டம் தயாராகி வருகிறது. அரசியல் தீர்வுடன், அபிவிருத்தியும் முக்கியம். இலங்கையில் நடைபெறும் விடயங்கள் தொடர்பாக இந்தியமக்களிடம்விழிப்புணர்வு வேண்டும். இலங்கைக்கு வாங்க... அழகான நாடு, நேரடியாக வந்து பிரச்சினைகளைத் தெரிந்துகொள்ளுங்கள். - என்றார். (05)

# உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் சுவிஸர்லாந்து தூதரக ஏற்பாட்டில் பயிற்சிப் பட்டறை!

இலங்கையிலுள்ள சுவிட்ஸர்லாந்து தூதரகம் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் சிவில் சமூகப்பிரதிநிதிகளுக்குப்பயிற்சிப்பட்டறை ஒன்றை நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கம் உண்மை மற்றும் நல்லிணக்கஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கான முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டுவரும் நிலையில், அதற்கு தென்னாபிரிக்கா, சுவிட்ஸர்லாந்து மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் வெவ்வேறு அடிப்படைகளில் ஒத்துழைப்புக்களை வழங்கி வருகின்றன.

அதன் ஓரங்கமாக அண்மையில்மேற்குறிப்பிட்ட மூன்று நாடுகளினதும் இராஜதந்திரிகள் உத்தேச உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியுடனும், அதன் பின்னர் சிவில் சமூகப்பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடல்களை முன்னெடுத்திருந்தனர்.

இந்நிலையில் தற்போது இலங்கையிலுள்ள சுவிட்ஸர்லாந்து தூதரகம் தெரிவுசெய்யப்பட்ட சிவில் சமூகப்பிரதிநிதிகள் சிலருக்கு உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் பயிற்சிப்பட்டறை ஒன்றை நடத்துவதற்குத் திட்டமிட்டிருப்பதாக அறியமுடிகிறது. குறிப்பாக வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களுடன் நெருங்கிப்பணியாற்றுவோர், வலிந்துகாணாமலாக்கப்படல் சம்பவங்கள் தொடர்பில் இயங்கிவருவோர் உள்ளிட்ட 10 பேருக்கு இந்தப் பயிற்சிப்பட்டறையில் பங்கேற்பதற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருப் பதாகவும் தெரியவருகிறது. உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவை தாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை எனப் பாதிக்கப்பட்ட தரப்பினர் பகிரங்கமாகவே அறிவித்திருக்கும் பின்னணியிலேயே இந்நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (05)

# தண்ணீர் பவுஸர் மோதிச் சிறுவன் சாவு பவுஸருக்கு தீ வைத்தனர் பொதுமக்கள்

## வாழைச்சேனையில் சம்பவம்



வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரிதிதென்ன பகுதியில் தண்ணீர் பவுஸரொன்று விபத்துக்குள்ளானதில் 6 வயது சிறுவன் பலியாகியுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் சனிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

சைக்கிளில் மாலைநேரவகுப்புக்கு தனது சகோதரனுடன் சென்ற சிறுவனே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார்.

தண்ணீர் ஏற்றி வந்த பவுஸரொன்று பின்நோக்கி சென்றபோது அதனுள் அகப்பட்ட சிறுவன் சம்பவ இடத்திலே உயரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிறுவன் உயிரிழக்கக் காரணமாக தண்ணீர் பவுஸரை பொதுமக்கள் ஆத்திரத்தில் தீயிட்டுகொளுத்தியுள்ளனர்.

இந்த விபத்தில் மரணமடைந்த சிறுவன் ரிதிதென்ன இக்ரஹ் வித்தியாலயத்தில் தரம் ஒன்றில் கல்வி கற்ற சலீம் ருஸ்திக் என்பவராவார்.

சிறுவனின் உடல் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றனர். (05)










காலைக்கதிர் Kalaikkathir

# 253 கிலோ ஐஸ் போதைப்பொருள் கடந்த வருடம் கைப்பற்றப்பட்டது

## 20,015 சம்பவங்கள் பதிவு

ஐஸ்போதைப்பொருள்பாவனை தொடர்பாக கடந்த வருடம் 20,015 சம்பவங்கள் பதிவாகியுள்ளன என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. இவ்வாறு ஐஸ் போதைக்கு அடிமையானவர்களில் பெரும்பாலானோர் இளைஞர்கள் என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. பொலிஸ்தலைமையகத்தின் 2022 ஆண்டு அறிக்கையின்படி, ஐஸ்போதைப்பொருளை பயன்படுத்தியதற்காக 18 ஆயிரத்து 955 பேர் மீது கடந்த ஆண்டு வழக்கு தொடரப்பட்டன. அவர்களில் 7 ஆயிரத்து 955 பேர் குற்றவாளிகளாகக்காணப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டில் கைப்பற்றப்பட்ட ஐஸ் போதைப்பொருள்களின் அளவு சுமார் 253 கிலோவாகும்.

இதேவேளை, பாபுல் போதைப் பொருள் பாவனை தொடர்பான 97 வழக்குகள் கடந்த ஆண்டு பதிவாகியுள்ளன என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் 97 பேர் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இவர்களில் 91 பேர் குற்றவாளிகளாகக் கண்டறியப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)



### இலங்கைக்கான

# கடன் நிவாரண நடவடிக்கையில் சீனாவும் இணையவேண்டும்!

## இந்திய நிதி அமைச்சர் கோரிக்கை

இலங்கையின் கடன் நிவாரண முயற்சிகளில் சீனாவும் இணைந்து கொள்ளவேண்டும் என இந்தியநிதியமைச்சர் நிர்மலா சீத்தாராமன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கைக்கு அதிகளவு கடனை வழங்கிய நாடு என்ற அடிப்படையில் இலங்கையை கடன் நெருக்கடியிலிருந்து மீட்பதற்காக இந்தியா, ஜப்பான், பிரான்ஸ் ஆகிய நாடுகள் மேற்கொண்டுள்ள முயற்சிகளில் சீனாவும் இணைந்துகொள்வதை வரவேற்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

கடன் நெருக்கடியில் சிக்குண்டுள்ள நாடுகளுக்கான நிவாரண நடவடிக்கைகளை உலகவங்கியும் சர்வதேச நாணயநிதியமும் துரிதப்படுத்தவேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (05)

# மட்டு. மாவட்டத்தில் ஒரே மாதத்தில் 8 பேர் தற்கொலை

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி, கொக்குவில் ஆகிய இரு பொலிஸ் பிரிவுகளில் 2 முதியவர்கள் வெள்ளிக்கிழமை தற்கொலை செய்துள்ளனர்.

வெல்லாவெளி பொலிஸ் பிரிவின் கீழ் உள்ள மண்டூர் பிரதேசத்தில் 81 வயதுடைய பெண் ஒருவரும், கொக்குவில் பொலிஸ் பிரிவிலுள்ள சவுக்கடி பிரதேச கடலில் 64 வயதுடைய ஆண் ஒருவரும் தற்கொலை செய்துகொண்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் ஜனவரி தொடக்கம் ஜூன் மாதம் வரையிலான 6 மாத காலப்பகுதியில் நான்கு சிறுவர்கள் உட்பட 79 பேர் தற்கொலை செய்துகொண்டுள்ளனர்.

இதில், காத்தான்குடி பொலிஸ் பிரிவில் 9 பேரும், மட்டக்களப்பு பொலிஸ் பிரிவில் 10 பேரும், வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் 10 பேரும், களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவில் 13 பேரும் தற்கொலை செய்துகொண்டுள்ளதுடன், ஜூலை முதலாம் திகதி தொடக்கம் 29ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் 8 பேர் தற்கொலை செய்துள்ளனர்.

இதேவேளை, கடந்த 2022 ஆம்ஆண்டில் 133 பேர் தற்கொலை செய்துகொண்டுள்ளனர்.

எனவே, கடந்த 2022 ஆம் ஆண்டின் புள்ளிவிவரத்தையும் இந்த ஆண்டின் 6 மாத கால புள்ளிவிவரத்தையும் ஒப்பிடும்போது, தற்கொலைகள் அதிகரித்துள்ளதாக மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலய புள்ளிவிவரம் காட்டுகின்றது.

எனவே, அதிகரித்து-வரும் தற்கொலை சம்பவங்களைத் தடுத்து நிறுத்த அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும். (05)

# பட்டதாரிகளை ஆசிரியர் சேவைக்கு இணைப்பது தொடர்பில் அறிவித்தல்

ஆசிரிய சேவைக்குப் புதிய பட்டதாரிகளை இணைத்துக்கொள்வது தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கைகள் மாகாண மட்டத்தில் மேற்கொள்ளப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

விஞ்ஞானம், தொழில்நுட்பம், ஆங்கிலம் மற்றும் வெளிநாட்டு மொழிகள் ஆகிய பாடங்களில் புதிய பட்டதாரிகளை இணைத்துக்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, நீதிமன்றத்தின் தடை உத்தரவு காரணமாக ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களை ஆட்சேர்ப்பு செய்வது தாமதமாகும் என கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# பஸ் விபத்தில் 14 பேர் படுகாயம்

கொழும்பிலிருந்து மொனராகலை நோக்கி பயணித்த பயணிகள் பஸ் ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த பஸ் வேகமாக பயணித்ததால் கொடக்காவலை பள்ளத்தில் வீழ்ந்துள்ளதாக பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த விபத்தில் குறைந்தது 14 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (05)

# வவுனியா ஓமந்தையில் விபத்து: ஒருவர் சாவு; ஒருவர் படுகாயம்

ஏ - 9 வீதி, வவுனியா ஓமந்தை பகுதியில் உள்ள இராணுவ மற்றும் பொலிஸ் சோதனை சாவடிக்கு அருகில் நேற்று(ஞாயிற்றுக்கிழமை) அதிகாலை ஒரு மணியளவில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் பலியாகியுள்ளதுடன் மற்றைய ஒருவர் படுகாயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது

இரவு ஒரு மணியளவில் குறித்த சோதனைசாவடிக்கு அருகில் வாகனம் ஒன்று பழுதடைந்து நின்றுள்ளது . அதனை வவுனியா நகர்நோக்கி உள்ள வாகனம் திருத்தும் இடத்திற்கு கொண்டு செல்வதற்காக உழவு இயந்திரத்தினூடாக கட்டி இழுப்பதற்கு முயற்சி மேற்கொண்டிருந்தனர். இதன் போது அதே திசையில் பயணித்த பாரஊர்தி ஒன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து உழவு இயந்திரம் மற்றும் ஏனைய வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் 23வயதுடைய இராமச்சந்திரன் சதீஸ்குமார் என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன் ஏனைய நபர் ஒருவர் படுகாயமடைந்து 1990 அம்புலன்ஸ் மூலம் வவுனியா பொதுவைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டு அதி தீவிர பிரிவில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான விசாரனைகளை ஓமந்தை பொலிஸாரின் போக்குவரத்து பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (05)

# நிலமும் மக்களும் இல்லாத சமஷ்டியால் யாருக்கு பயன்?

## 13 ஆவது திருத்தம் இருப்பைத் தக்க வைக்கும் என்கிறார் விக்னேஸ்வரன்



பதின்மூன்றாவது திருத்தத்தை வேண்டாம் என எதிர்ப்பவர்கள், எமது நிலமும் பறிபோய் இனப் பரம்பலும் மாற்றப்பட்டதன் பின் சமஷ்டியைப் பெற்று என்ன பயன் என தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் விக்னேஸ்வரன் கேள்வி எழுப்பினார்.

திருநெல்வேலி பகுதியில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

சிலர் பதின்மூன்றாவது திருத்தம் வேண்டாம், பதின்மூன்றை கேட்பவர்கள் துரோகிகள் எனத் தொடர்ச்சியாகக் கூறிக்கொண்டு வருகிறார்கள்.

அவர்கள் கூறும் போது நானும் பதின்மூன்றை வேண்டாம் எனக் கூறிவந்த நிலையில் தற்போது பதின்மூன்றை வேண்டும் என கூறுகின்றேன் எனக் கூறுகிறார்கள்.

நாங்கள் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்கான ஆரம்ப புள்ளியாக பதின்மூன்றை ஏற்றுக்கொண்டோமே தவிர தமிழ் மக்களின் நிரந்தர அரசியல் தீர்வாக இன்றும் பதின்மூன்றை ஏற்கவில்லை.

தற்போதைய சூழ் நிலையில் எமக்கு வழங்கப்பட்டுள்ள 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்தாது விட்டால் தமிழ் மக்களின் இருப்புக் கூட கேள்விக்குறியாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

**காணிகள் பறிபோன பின் சமஷ்டி யாருக்கு?**

வடக்கில் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள், தொல்லியல் மற்றும் பாதுகாப்பு வலயங்கள் என்ற போர்வையில் அபகரிக்கப்பட்டு வருவதுடன் நிலத்தினிவுகளை பெரும்பான்மையினர் வாழும் மாகாணங்களுடன் இணைக்கும் செயற்பாடுகளும் இடம்பெற்று வருகிறது.

அதுமட்டுமல்லாது மகாவலி என்ற போர்வையில் தமிழ் மக்களின் பூர்வீக வாழ்விடங்களில் சிங்கள குடியேற்றங்கள் நிறுவப்பட்டு வரும் நிலையில் அதனை தடுப்பதற்கு 13 ஆவது திருத்தத்தில் வழங்கப்பட்ட காணி அதிகாரத்தைப் பயன்படுத்த முடியும்.

மேலும் தமிழ் மக்கள் மற்றும் தமிழ் புத்திஜீவிகள் துறை சார்ந்த நிபுணர்கள் எனப்பலரும் நாட்டை விட்டுத் தொடர்ச்சியாக வெளிநாடுகள் சென்று கொண்டிருக்கும் நிலையில் தமிழ் இன விகி தாசாரம் வெகுவாகக் குறைந்து வருகிறது.

இவ்வாறான ஒரு நிலையில் பதின்மூன்று வேண்டாம் சமஸ்டி தான் வேண்டும் என கேட்பவர்கள் இவ்வளவு விடயங்களும் நடந்து முடிந்த பின்னர் சமஸ்டியை பெற்று என்ன செய்யப் போகிறார்கள்.

ஓர் இனத்தின் அடையாளத்தை தக்க வைத்துக் கொள்வதற்கு நிலப்பரப்பு அவசியம் நிலங்களை இழந்து எமது அடையாளங்களைக் காக்க முடியாது.

**ஜனாதிபதியுடன் சந்திப்பு**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் கட்சிகளின் தலைவர்களை அண்மையில் சந்தித்து கலந்துரையாடிய நிலையில் பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு கூறினோம்.

இறுதியாக இடம்பெற்ற சர்வ கட்சி மாநாட்டில் தமிழ் கட்சிகளை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்த ஜனாதிபதி பெரும்பான்மை இன கட்சிகளை சேர்ந்த கட்சியின் தலைவர்களையும் மாநாட்டுக்காக அழைத்திருந்தார்.

பதின்மூன்று தொடர்பில் கலாநிதி கந்தையா விக்னேஸ்வரன் தயாரித்த வரைவு ஒன்றை ஏற்கனவே ஜனாதிபதியிடம் நாம் கையளித்து உள்ள நிலையில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த கட்சியைகளின் தலைவர்களை ஏன் ஜனாதிபதி எம்முடன் அழைத்தார் எனச் சிந்தித்தேன்.

ஒருவேளை பதின்மூன்றைக் குழப்புவதற்காக அழைத்தாரோ என சிந்தித்தபோது நடைபெற்ற மாநாட்டில் சிலரை தவிர பெரும்பாலானோர் பதின் மூன்று தொடர்பில் சாதகமான நிலைப்பாட்டை கொண்டிருந்தனர்.

**குழப்பிய சுமந்திரன்**

பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப் படுத்துமாறு முன்னர் கூறிய சுமந்திரன் இறுதியாக இடம்பெற்ற சர்வ கட்சி மாநாட்டில் 13ஐ நடைமு-றைப்படுத்துவதை விடுத்து மாகாண சபை தேர்தலை உடனடியாக வைக்குமாறு கூறினார் அதற்கு ஜி.எல்.பீரிஸ் ஆதரவாக பேசினார்.

**கோபமடைந்த ஜனாதிபதி**

சுமந்திரனுடைய கருத்தால் கோபமடைந்த ஜனாதிபதி ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு கருத்தை கூற வேண்டாம் முதலில் பதிமூன்றை நடை முறைப்படுத்துமாறு கூறினீர்கள் தற்போது தேர்தலை கேட்கிறீர்கள் முதலில் உங்களின் நிலைப்பாட்டை சரியாக அறிந்து வாருங்கள் என கூறினார்.

அன்று இரவு எனக்கு தொலைபேசியில் அழைப்புடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுமந்திரன் தேர்தலை முதலில் நடத்த வேண்டும் என்கிறார் உங்களின் நிலைப்பாடு என்ன நாங்கள் கலந்துரையாடல்களை தொடர்ந்து நடத்துவதா இல்லையா என கேட்டார்.

சுமந்திரன் கருத்தை சாதகமாக வைத்து குழப்ப வேண்டாம். சுமந்திரனுடைய கருத்தை சாதகமாக பயன்படுத்தி பதின்மூன்றை நடைமுறைப்படுத்தும் விடையங்களில் இருந்து நழுவக் கூடாது என தெரிவித்தேன்.

பதின் மூன்றை நடைமுறைப்படுத்துமாறு இந்தியாவை கோரிய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தன் உடல்நலகுறைவுக்காக சுமந்திரன் பங்குபற்றியுள்ளார்.

அவரின் கருத்தை சாட்டாக வைத்து 13 நடைமு-றைப்படுத்துவதில் இருந்து தாங்கள் விலகிக்கொள்ள பார்க்கிறீர்களா? என ஜனாதிபதியிடம் கேட்டேன்.

அதற்கு அவ்வாறு இல்லை பதின்மூன்று தொடர்பில் எமது கலந்துரையாடல்களை முன்னோக்கி கொண்டு செல்வோம் நாங்கள் எதிர்வரும் பாராளுமன்ற அமர்வுக்கு முன்னர் பேசுவோம் என்றார்.

ஆகவே தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை பெற்றுக் கொள்வதற்கு தமிழ் மக்களின் இருப்பை தக்க வைத்துக் கொள்வதற்கு அரசமைப்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள 13வது திருத்தத்தை தமிழ் கட்சிகள் ஓரணியில் நின்று நடைமுறைப்படுத்தவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (05)

# தலவாக்கலை பிரதேசத்தில் மாபெரும் மருத்துவ முகாம்





தலவாக்கலை நகரில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) மாபெரும் மருத்துவ முகாமொன்று இடம்பெற்றது.

இந்த மருத்துவ முகாமில் 1000 பெருந்தோட்டத் துறையைச் சேர்ந்த நோயாளர்களுக்கு இலவசமாக மருத்துவ சேவைகள் முன்னெடுக்கப்பட்டன.

ஹேமாஸ் வைத்தியசாலையின் 6 வைத்திய ஆலோசகர்கள், 25 வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் மருத்துவ உதவியாளர்கள் மருத்துவ முகாமில் பங்குபற்றி மக்களுக்கு சேவையாற்றவுள்ளனர். (05)

# அங்கொடை நோயாளர் உயிரிழந்த சம்பவம்; சந்தேகநபர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

அங்கொடை தேசிய மனநல வைத்தியசாலையின் விடுதியில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவந்த நோயாளர் ஒருவர் உயிரிழந்தமை தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

புதுக்கடை நீதிவான் முன்னிலையில் சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப்பட்டபோதே விளக்கமறி-யலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

நோயாளர் உயிரிழந்தமை தொடர்பில் மற்றுமொரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலி-ஸார் தெரிவித்துள்ளனர். இந்நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் இதுவரை மொத்தமாக நான்கு பேர் கைது செய்-யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் அனைவரும் வைத்தியசாலையின் சுகாதார உதவியாளர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

அங்கொடை தேசிய மனநல நிலையத்தில் சிகிச்சை பெற்றுவந்த 48 வயதான ஒருவர் கடந்த 25ஆம் திகதி உயிரிழந்தார்.

இச்சம்பவம் தொடர்பில் முன்னர் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளதுடன், விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக தேசிய மனநல நிலையத்தின் பணிப்பாளர் வைத்தியர் தம்மிக விஜேசிங்க தெரிவித்தார்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினாலும் மனநல நிலையத்தின் விசேட வைத்திய நிபுணர்கள் குழுவொன்றினாலும் தனித்தனியே விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நோயாளியின் உயிரிழப்பு தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. தேசிய மனநல நிலையத்தின் பணிப்பாளர், பிரதி பணிப்பாளர் ஊழியர்களிடம் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர் என மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கை – இந்திய எரிபொருள் குழாய் திட்டம்; செயற்பாட்டு ஆய்வு நடவடிக்கைகள் ஆரம்பம்

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான எரிபொருள் விநியோக குழாய் திட்டத்துக்கான செயல்பாட்டு ஆய்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட உள்ளன. இந்தசெயல்பாட்டின்ஆய்வை ஓகஸ்ட் மாதத்தில் ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளதாக இந்தியா அறிவித்துள்ளது.

இந்த அறிவிப்பை தொடர்ந்து அதற்கான ஒத்துழைப்பை முழுமையாக வழங்குவதாக ஜனாதிபதி அலுவலக பிரதானி சாகல ரத்நாயக்க இந்தியாவுக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

இந்தியாவின் தென் பகுதியின் நாகப்பட்டினத்தை அண்மித்தபிரதேசத்திலிருந்து இலங்கையை நோக்கி எரிபொருள் விநியோக குழாய் திட்டம் முன்னெடுக்கப்பட உள்ளது. கடலுக்கு அடியில் முன்னெடுக்கப்பட உள்ள இந்த குழாய் திட்டமானது இலங்கையில்வடக்குமற்றும் கிழக்கைநோக்கிமுதல்கட்டமாக விஸ்தரிக்கப்பட உள்ளது.

வடக்கில் மன்னார் மற்றும் வவுனியா வரையிலும், கிழக்கில் திருகோணமலை வரையிலும், இதன் பிரதான எரிபொருள் குழாய் கொழும்பு வரைக்கும் விஸ்தரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

எரிபொருளை உள்வாங்குதல் மற்றும் விநியோகித்தல் ஆகிய இரு செயல்பாடுகளையும் உள்ளடக்கியதாக அமையப் பெறவுள்ளஇலங்கை-இந்திய எரிபொருள் குழாய் திட்டத்திற்கான அனைத்து பூர்வாங்கல் நடவடிக்கைகளும் தற்போது நிறைவடைந்துள்ளன.

திட்டத்திற்கான செயல்பாட்டு ஆய்வை தொடர்ந்து முதல் கட்ட பணிகள் முன்னெடுக்கப்படும் என்று சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் இந்தியாவால் முன்மொழியப்பட்ட இந்த இணைப்புதிட்டமானது, 'அண்டைய நாடுகளுக்கு முதலிடம்' கொள்கைதிட்டத்தில் ஆற்றல் வள இணைப்பு திட்டங்களை மையப்படுத்தியதாகும்.

ஏற்கனவே இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பல்வேறு துறைசார் ஒத்துழைப்புகள் காணப்படுகின்ற போதிலும், ஆற்றல் வளத்தை மையப்படுத்திய இவ்வாறான நேரடிஇணைப்புகள்இல்லை.

அந்த வகையில், இலங்கை மாத்திரமன்றி இந்தியாவின் ஆற்றல் வள இணைப்பு திட்டத்திற்குள் பங்களாதேஷ்,பூட்டான்மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளும் உள்வாங்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்திற்காக சமீபத்திய ஆண்டுகளில் டெல்லி மேற்கொண்ட முயற்சிகளின் பிரகாரம் இந்தியாவை கேந்திரமாக கொண்ட ஆற்றல் வள கூட்டு இணைப்பு திட்டத்திற்கு பூட்டான், நேபாளம் மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கு இடையிலான முத்தரப்பு மின் வர்த்தக ஒப்பந்தத்தின் வரைவு இறுதியாக்கப்பட்டுள்ளன .

இந்தஒப்பந்தம்நேபாளம் மற்றும் பங்களாதேஷின் நீண்டகால கோரிக்கையை பூர்த்தி செய்யும் என்பதுடன் எல்லைகடந்தஇணைப்புகள் ஊடாக இந்திய ஆற்றல் வள வர்த்தகத்தை ஊக்குவிப்பதாகவும் அமையும். மறுப்புறம் இந்த ஆற்றல்வள இணைப்புதிட்டத்தின் ஊடாக மின்சாரத்தை கொள்வனவு செய்தல், விற்பனை செய்தல் மற்றும்மின்பரிமாற்றங்களில் பங்கேற்றல்ஆகியதுறைகளில் ஈடுப்பட ஒப்பந்தத்தின் பங்குதாரர்களுக்கு இந்தியா வாய்ப்பு அளிக்கிறது. ஆனால் எந்தவொரு சீன நிதியுதவியின் கீழ் உள்ள ஆற்றல் வள உற்பத்திகளை இந்திய இணைப்பு திட்டத்தின் மூலம் வர்த்தகம் செய்ய முடியாத வகையில்ஒப்பந்தம் வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

## மூழ்கிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த விடயத்தையும் நாம் கவனத்தில் கொண்டே தீர்மானங்களை எடுப்போம். அதன் அடிப்படையில் எமது செயற்பாடுகள் முன்னோக்கி நடைபெறும் - என்றார்.

## யாழ்ப்பாணம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடியாது. தமிழ் கடவுள் முருகன்இருக்கும்வரைதமிழ் உறவுகள் இருக்கும்வரை யாரும் நம்மை அசைக்க முடியாது.

இந்தக் கோயிலுக்கு உள்ளே வரும் பொழுது அருமையான மந்திரங்கள் எல்லாம் ஓங்கி ஒலித்தன அதேபோன்று தமிழ் நாதஸ்வர கலைஞர்களின் அற்புத இசையில் எம்பெருமான் வளம் பெறும் காட்சி அற்புதமானது.

தமிழ்நாட்டில் எல்லாம் இவ்வாறு கிடையாது. எல்லாவற்றையும் அரசு எடுத்துக்கொண்டதுஅதற்குப்பிறகு உண்டியலில் பணம் நிரப்புவதை மட்டுமே அவர்கள் குறியாகக் கொண்டிருந்தார்கள் இப்படியான அருமையான காட்சிகள் எல்லாம் அங்கே குறைந்துவிட்டது”

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

## இரண்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடங்கிஉள்ளோம்.ஜனாதிபதியுடனும்திறைசேரியுடனும் அமைச்சரவையுடனும் கலந்துரையாடி இந்தச் செயற்பாட்டை முன்னெடுப்பதற்கு தீர்மானித்துள்ளோம்

அதேநேரம் தற்போது மாதத்தின் முதல் வாரத்தில் எரிபொருளுக்கான விலை நிர்ணயம் மறுசீரமைக்கப்படுகிறது.இந்தச் செயற்பாடு உலகசந்தையின்எரிபொருள் விலைஅதிகரிப்புகுறைவுக்கு ஏற்பவேநடைபெறுகின்றது. எனினும் நாம் நிலையான விலை ஒன்றை போணுவதற்கு விரைவில் நடவடிக்கைகளைஎடுக்கஉள்ளோம்.

எரிபொருள் நிரப்பு நிலையங்கள் தமது இருப்புக்களை வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமைய பின்பற்றவேண்டும்என்றும் கேட்டுக்கொள்கிறோம் - என்றார்.

## லண்டன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதையம் அதுவேதான் என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு ஒன்று திரண்ட புலம்பெயர் தமிழர்கள், பிரித்தானிய அரசிற்கும் சர்வதேசத்திற்கும்தமதுகோரிக்கைகளை முன்வைத்தனர்.

தமிழரின் வரலாற்றுப் பக்கங்களில்அழிக்கமுடியாத ரணங்களை கொடுத்த 1983 ஆம் ஆண்டு ஜூலை இனக்கலவரம்நடந்தேறி40 ஆண்டுகள் ஆன நிலையில் இதுவரையில் எந்தவித நீதியும் கிடைக்கவில்லை. எனவேசர்வதேசமேநீதியைப் பெற்றுத் தரவேண்டும் என்று தெரிவித்து டர்பால்கர் (Trafalgar) சதுக்கத்தில் இந்த எழுச்சிப் பேரணி இடம்பெற்றது.

மாலை 5 மணியளவில் பிரத்தானிய கொடி மற்றும் தமிழீழ தேசிய கொடி ஆகியவற்றை ஏற்றியதுடன் தொடங்கிய இந்நிகழ்வில் பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள்மற்றும்மனித உரிமை ஆர்வலர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

பிரித்தானியாவில்உள்ள பல தமிழ் அமைப்புக்கள் மற்றும்தமிழ் பாடசாலைகள் சங்கங்கள்போன்றஅனைத்து தரப்பினரும்ஒன்றிணைந்து நடத்திய இந்நிகழ்வில் இனப்படுகொலைக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுத்திய பிரித்தானியநாடாளுமன்றஉறுப்பினர்கள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்களின் உரைகளும் இடம்பெற்றன. தமிழர் மீதான படுகொலை களை மாணவர்கள் கலை வடிவில் வெளிப்படுத்தினர். அதேவேளை 1983 இனப்படுகொலையின் பதிவுகளை சுமந்த விளக்க புகைப்பட கண்காட்சியும் அங்கு பார்வைக்கு வைக்கப் பட்டிருந்தது.

இலங்கை வரலாற்றில் கறுப்பு ஜூலையின் முக்கியத்துவம் பல தசாப்த காலப் போரில் கறுப்பு ஜூலையின் தாக்கம், தமிழர்கள் நீதி மற்றும் உரிமைகளை தேடிக்கொண்டிருக்கும் ஈழத்தமிழர்கள் எப்படி நமது இலக்குகளை அடைவோம் ஆகிய கருப்பொருட்களை உள்ளடக்கி கலாநிதி மதுரா இராசரத்தினமும் 1983 இனக்கலவரத்தின் போது தனது நேரடி அனுபவத்தைதணிகாசலமும் பகிர்ந்து கொண்டனர். அத்துடன் சர்வதேசகுற்றவியல்மற்றும் மனித உரிமைகள் சட்டம் போன்ற சட்டத்துறைகளில் சர்வதேச சட்ட நிபுணரான டொபி கட்மன் (Toby Cadman) , மற்றும் PEARL அமைப்பின்பிரதிநிதிஅபிராபி ஆகியோரும் சிறப்புரைகள் ஆற்றினர்.


காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

# இலத்திரனியல் கடவுச்சீட்டு வழங்கல் நிதிச் சிக்கலால் தற்காலிக நிறுத்தம்

அதிகசெலவுஏற்படுவதன் காரணமாக இலத்திரனியல் கடவுச்சீட்டு வழங்குவதை தற்காலிகமாக நிறுத்த பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது. ஓர் இலத்திரனியல் கடவுச்சீட்டை தயாரிப்பதற்கு 20 அமெரிக்க டொலர்கள்செலவாவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வருடாந்தம் குறைந்தது 7 லட்சத்து 50 ஆயிரம் கடவுச்சீட்டுகள் வழங்கப்படுகின்றன எனவும் அமைச்சுகூறுகிறது. அதற்குத் தேவையான தொகை 15 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

இதன் காரணமாக இலத்திரனியல் கடவுச்சீட்டுமுறைமீள ஆரம்பமாகும் வரை சாதாரண கடவுச் சீட்டை அச்சிட்டு வழங்க



திட்டமிடப்பட்டுள்ளது. (05)

# மது போதையில் வாகனம் செலுத்திய சாரதி: மோ. சைக்கிளை மோதியதில் தம்பதி இறப்பு

## மகன் கவலைக்கிடம்

திஸ்ஸமஹாராம - கதிர்காமம் பிரதான வீதியின் 6ஆம் கட்டைப் பகுதியில் மோட்டார் சைக்கிளும் வான் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் ஆசிரியை ஒருவரும் அவரது கணவரும் உயிரிழந்துள்ளதுடன் அவர் களது 15 வயது மகன் மாத்தறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இவரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக மருத்துவமனைவட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வானின் சாரதி அதிக மதுபோதையில் இருந்ததாக சந்தேகிக்கப்படுவதாகவும், அவர் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார் எனவும் திஸ்ஸமஹாராம பொலிஸார் தெரிவித்தனர்.

கதிர்காமத்தில் இடம்பெற்ற பூஜைக்காக கிரிந்தையிலிருந்து பயணித்த வேன் ஒன்றே மோட்டார் சைக்கிளை மோதியதாக பொலிஸார் தெரிவித்தனர். (05)

# யாழில் பல்கலைக்கழக மாணவர்கள் தங்கியிருந்த வீட்டின் மீது தாக்குதல்

## ஒருவர் காயம்

யாழ்ப்பாணம் - திருநெல்வேலி பகுதியில் வாள்வெட்டு சம்பவமொன்று பவாகியுள்ளது.

பல்கலைக்கழக மாணவர்கள் தங்கியிருந்த வீடு ஒன்றின் மீது சனிக்கிழமை அதிகாலை இரண்டு மோட்டார் சைக்கிளில் முகத்தை மறைத்தவாறு வந்த நால்வர் தாக்குதல் நடத்தி விட்டு தப்பி சென்றுள்ளனர்.

இதன்போது வீட்டின் தளபாடங்கள்மற்றும்ஜன்னல்கள்என்பனவற்றைஉடைத்து சேதமாக்கியுள்ளதுடன்,அங்கு தங்கி இருந்த மாணவன் ஒருவருக்கு சிறுகாயம் ஏற்பட்டுள்ளது.

சம்பவம் தொடர் பாக கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.07.2023இல் வெளியிடப்பெற்றது.